Registered as a magazine in Sri Lanka

# நிமிர்வு


ISSN 2579 - 2113

அரசியல் சமூக பொருளாதார செயற்பாட்டிதழ்

facebook.com/nimirvu
youtube.com/nimirvu
www.nimirvu.org

பார்வை - 48 | ஐப்பசி , கார்த்திகை 2021 | பக்கங்கள் - 24 | விலை - ரூபா 20.00

## தமிழர் தாயகத்தில் கைத்தொழில் மய நீக்கம் திட்டமிட்டு முன்னெடுக்கப்படுகிறதா?






ஈழத்தமிழர் சிறுபான்மையினரா?



ஆசிரியர் முன்னேற வேண்டும்



பெருந்தொற்று என்பது எமது வாழ்வியலுக்கு எதிரான போரின் விளைவு

- ஆராயும் அறிவே நிமிர்வு -

# இயற்கை விவசாயத்தை நோக்கி திரும்புவது காலத்தின் கட்டாயம்



- அமுது -

சிறீலங்கா அரசாங்கம் இரசாயன உரம், கிருமிநாசினிகள் மற்றும் களைநாசினிகளை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் தடை செய்துள்ளமை தொடர்பான அறிவிப்பு ஏப்ரல் 22 ஆம் திகதி முதன் முதலாக வெளியாகி இருந்தது. நாட்டுக்கு வெளியில் செல்லும் 400 மில்லியன் டொலர்களை மிச்சப்படுத்த எடுத்த முடிவா? அல்லது இரசாயன உரங்களால் மக்களுக்கு பல தீங்குகள் உண்டு அதனால் எடுக்கப்பட்ட முடிவா என்பது அரசுக்கே வெளிச்சம். உண்மையில் திடீரென வெளியான இந்த அறிவிப்பால் இந்நாட்டிலுள்ள பல விவசாயிகள் என்ன செய்வதென தெரியாமல் திரிசங்கு நிலையில் இருந்தனர். விவசாயிகளின் எதிர்ப்பையடுத்து திடீரென பல்டியடித்த அரசு தனியார் துறையினர் இறக்குமதி செய்யலாம் என அறிவித்துள்ளது.

அரசாங்கம் திடீரென இப்படியான கொள்கை முடிவை அறிவித்தது தவறான அணுகுமுறை. படிப்படியாக செய்யப்பட வேண்டியது. நஞ்சற்ற விவசாயத்தை நோக்கி இங்குள்ள விவசாயிகளை நகர்த்துவதாக இருந்தால், படிப்படியாக மாற்றங்களை செய்து செயற்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் இராணுவவாதியான கோத்தபாய ராஜபக்ச இந்த விடயத்தையும் இராணுவக் கண்ணோட்டத்தில் தான் அணுகி இருக்கிறார். இதனால் தெற்கில் விவசாயிகளின் போராட்டங்கள் வலுவடைந்து வந்ததனை அடுத்தே அரசு கீழிறிங்கியது.

1950 – 1960 வரையான காலப்பகுதியில் நடந்த பசுமைப் புரட்சிக்குப் பின்னராக கடந்த 60 வருடங்களுக்கும் மேலாக இரசாயன உர, கிருமி நாசினி பாவனை இலங்கையில் தொடர்ந்து வந்துள்ளது. பிறகு வந்த அரசுகளும் இவற்றை ஊக்குவித்தே வந்தன. அதுவும் மானிய அடிப்படையில் விவசாயிகளுக்கு அளவு கணக்கின்றி விநியோகித்து வந்தன. இதனால் பாரம்பரியமாக இயற்கை விவசாயத்தை மேற்கொண்டிருந்த எம் விவசாயிகள் கொஞ்சம் கொஞ்சமாக இரசாயன உரங்களுக்கும், கிருமிநாசினிகளுக்கும் அடிமையாகினர். இதனைத் தொடர்ந்து இங்கே சிறுநீரக பாதிப்புகள், புற்று நோய் பாதிப்புகள், மேலும் பல உடல் உபாதைகள் இந்த இரசாயன பாவனையால் வந்ததை மருத்துவ தகவல்களும் உறுதி செய்தன.

“2020 ஆம் ஆண்டளவில் இலங்கையில் இரசாயன உரத்தை வழங்குகின்ற மற்றும் விநியோகிக்கின்ற சந்தையில் தலைமைத்துவத்தை அடைந்து கொள்ளல்” எனும் நோக்கில் செயற்படுவதாக இலங்கை அரசின் வரையறுக்கப்பட்ட லங்கா உரக் கம்பனியின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் இலங்கை அரசுக்கு எவ்விதமான தூர தரிசனமும் கிடையாது என்பது புலனாகிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள விவசாயிகள் தமக்கான சேதன பசளையை சுயமாக உற்பத்தி செய்து பெரும்போக விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். எவரும் சேதனப் பசளைக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபடவில்லை. என விவசாயத்துறை அமைச்சர் அண்மையில் கருத்து தெரிவித்திருந்தார். அது உண்மையும் கூட.

வடக்கு கிழக்கிலுள்ள விவசாயிகள் பலரும் கடந்த பத்தாண்டுகளாக தான் அதீத உரப்பாவனைக்கு பழக்கப்படுத்தப்பட்டனர். 2009 ஆம் ஆண்டுவரை தமிழர் தாயகப் பகுதிகளில் யூரியா உரங்களைப் பெற்றுக் கொள்வதில் பல்வேறு நெருக்கடிகள் இருந்து வந்தன. இதனால் எம் விவசாயிகள் பாரம்பரியமாக ஆடு, மாட்டெரு, கூட்டெருப் பாவனை, இலைதழைகளை தாழ்க்கும் முறை உள்ளிட்ட பல இயற்கை வழிமுறைகளையே விவசாய நடவடிக்

கைகளில் பயன்படுத்தி வந்தனர். மிகக் குறைந்தள வான இரசாயனங்களையே பாவித்து வந்தனர். பின்பு போர் முடிவுக்கு வந்ததற்குப் பின்னரான காலப் பகுதியில் தான் அதீத இரசாயன உரப்பாவனைக்கு அடிமையாகினர்.

உலகெங்கும் கொரோனா பெருந்தொற்று கடுமையாக பரவிய போதும் அதற்கு பின்னரான காலப்பகுதியிலும் இயற்கை விவசாயத்தை நோக்கி பல்வேறு நாடுகளும் கொஞ்சம் கொஞ்சமாக திரும்பி வருகின்றன. தற்சார்பு பொருளாதாரம், பண்டமாற்று பொருளாதாரம் குறித்தும் மக்கள் பரவலாக தங்கள் கவனத்தை செலுத்த ஆரம்பித்திருக்கிறார்கள்.

எம் விவசாயிகளும் குறைந்தளவு இரசாயன பாவனையை நோக்கி நகர்ந்து பின்பு முற்றிலும் இயற்கை விவசாயத்தை நோக்கி செல்வது தான் ஆரோக்கியமானது. வடக்கிலும் வருடாந்தம் புற்று நோயாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. சுன்னாகம் குடிநீரில் கழிவு எண்ணெய் கலந்த விவகாரத்திலும் அந்த நேரம் வலிகாமம் பகுதிகளில் உள்ள கிணற்று நீரின் மாதிரிகளை ஆய்வுகூட பரிசோதனைக்கு உட்படுத்திய போது அதில் அளவுக்க திகமாக நைத்ரேற்றுக்கள் கலந்துள்ளமை தெரிய வந்துள்ளது. செயற்கை உரங்களின் கண்மூடித்தன மான பயன்பாடு மண் மாசுபடுவதற்கும், நீர் நிலைகள் மாசுபடுவதற்கும் வழிகோலுகின்றது. யூரியா உரத் தின் முக்கிய கூறான இவை சிறுநீரக பாதிப்புகளை ஏற்படுத்தவல்லன என மருத்துவர்கள் கூறுகிறார்கள். அவற்றின் அளவுக்கதிகமான பயன்பாடு நீர்நிலை கள் மற்றும் நிலத்தடி நீரை மாசடையச் செய்கிறது. இவை தவிரவும் பல்வேறு நோய்களும் இரசாயனப் பாவனைகளால் ஏற்படுகின்றன. மண்வளத்தை குறைத்தலானது சுற்றுச்சூழல் அபாயங்கள் குறித்த கவலைகளை அதிகரித்து எம்மிடையே நிலையான விவசாயத்திற்கான அச்சுறுத்தலை அதிகரித்துள்ளது.

இனி பிரதேசவாரியாக சேதன பசளை உற்பத்திமையங்களை அதிகரித்து, இயற்கை கரைசல்களை செய்யும் முறைமைகளை விவ சாயிகளிடத்தில் பழக்கப்படுத்தி, எம் மூத்த விவசாயி களின் அன்றைய விவசாய முறைகளை கேட்டறிந்து இயற்கை விவசாயத்தை நோக்கி நகர முடியும். இதன் மூலம் ஆரோக்கியமான சந்ததியினை உருவாக்க முடியும்.

## “இயற்கை விவசாயத்தை நோக்கி திரும்பு வதன் மூலம் தான் எம் எதிர்கால தலைமுறையையும் பாதுகாக்க முடியும்”

அதிகரித்த இரசாயன பாவனையால் நுண்ணு யிர்கள் மற்றும் மண்ணின் வளத்தைப் பாதுகாக் கும் புழு, பூச்சிகள் அழிந்திருக்கும். இதனால் மண்ணின் வளமும் குன்றியிருக்கும். இரசாயன உரப்பாவனையிலிருந்து பயிர்ச்செய்கை நிலத்தை இயற்கை விவசாயத்துக்கு மாற்ற குறைந்தது மூன்றி லிருந்து ஐந்து வருடங்கள் எடுக்கும். திடீரென இரசாயன உரம் தடைப்பட்டமையால் பாதிக்கப் பட்ட விவசாயிகளுக்கு அதிகரித்த மானியங்களை வழங்குவதன் மூலம் அவர்களை பாதுகாக்க முடியும். இந்தியாவின் சிக்கிம் மாநிலம் முழுமையான இயற்கை விவசாயத்துக்கு மாறியுள்ளது. கியூபா போன்ற நாடுகளும் இயற்கை விவசாயத்தில் முன்னோடியாக உள்ளன. மேற்குலகில் பல நாடுகளும் இயற்கை விவசாயத்தை நோக்கி நகர்ந்து வரு கின்றன. இயற்கை விவசாயத்தை நோக்கி திரும்பு வதன் மூலம் தான் எம் எதிர்கால தலைமுறையையும் பாதுகாக்க முடியும்.

தற்போது அரசாங்கம் செயற்கை உரங்களை கிருமிநாசினிகளை இறக்குமதி செய்ய தனி யாருக்கு அனுமதி அளித்தாலும் இங்குள்ள சூழலியல் சார் அமைப்புகள் தொடர்ந்து விவசாயிகள் மத்தி யில் இயற்கை நோக்கி திரும்புவதற்கான உரையாடல் களை மேற்கொள்ள வேண்டும். முதலில் குறைந் தளவு கிருமிநாசினி, உரப் பாவனைக்கு விவசாயி களை மாற்ற வேண்டும். பின்பு முழுதாக இயற்கை விவசாயியாக மாற்ற முடியும். படிப்படியாக இயற்கை விவசாயத்தை நோக்கி எல்லோரையும் நகர்த்துவது காலத்தின் தேவையாகும்.

தமிழ் ஊடகத் திரட்டு,
லக்சுமி கட்டிடம்,
ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

நிமிர்வு

மின்னஞ்சல் : nimirvueditor@gmail.com
இணையம் : www.nimirvu.org
தொலைபேசி இல : 021 223 2121

## ஆசிரியர் பார்வை

# தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒற்றுமையே காலத்தின் தேவையாகும்

தலைப்பைப் பார்த்ததும் வழக்கமான "ஓர் அணியில் ஒன்றிணைய வேண்டும்" என்ற கூக் குரலே இது என்று நினைக்க வேண்டிய அவசிய மில்லை. தமிழ்மக்களின் நீண்டகால அரசியல் தீர்வு விடயமாக இருந்தாலும் சரி அபிவிருத்தி விடயமாக இருந்தாலும் சரி தற்போதுள்ள சிங்கள பேரினவாத அரசினால் இருப்பு பறிக்கப் படுவதாயினும் சரி அதனை கூட்டாக எதிர் கொள்ள தமிழ் தேசிய கட்சிகளின் ஒற்றுமையே காலத்தின் தேவையாகும். இதற்கு ஒரே தலைமை என்ற குடையின் கீழ் ஒன்றிணைய வேண்டிய அவசியமில்லை. தமிழர்களின் தாயகம்-தேசியம்-சுயநிர்ணயம் என்ற ஒரு குடையின் கீழ் ஒதுங்கி னாலே போதும்.

சிங்கள பௌத்த பேரினவாதிகளைப் பொறுத்தவரை தமிழரின் தாயகம்-தேசியம்-சுயநிர்ணயம் தொடர்பாக அவர்கள் ஒற்றுமை யாக இருக்கிறார்கள். மாறிமாறி வந்த ஐக்கிய தேசிய கட்சி அரசாகட்டும், சுதந்திரக் கட்சி அரசாகட்டும், அவர்களை எதிர்க்கும் JVP ஆகட்டும் தமிழரின் தேசிய உரிமைகள் தொடர்பாக ஒரே கொள்கையுடனேயே இருக்கிறார்கள். தமிழர்களும் சிங்கள பேரின வாதத்தின் ஆக்கிரமிப்புகளை கூட்டாக எதிர் கொள்வது தான் புத்திசாலித்தனமானது.

தமிழ்மக்களின் பொதுவான பிரச்சினை களுக்காவது இக்கட்சிகள் ஒற்றுமையாகக் குரல்கொடுக்காமல் உள்ளமை பல்வேறு சிக்கல்களை உருவாக்கி வருகிறது. உதாரண மாக தமிழ்மக்கள் சர்வதேசத்திடம் என்ன கேட்கி றோம் என்பதற்கான ஒரு திட்டமிட்ட வெளிநாட் டுக் கொள்கை ஒன்றை இங்கு உருவாக்க முடியாமல் இருக்கிறது. இங்குள்ள பல்வேறு தமிழ்த் தேசியக் கட்சிகளும் தேர்தல் காலத் தில் மட்டும் ஒற்றுமை, கூட்டுக்கள் பற்றி தீவிர மாக பேசுகின்றன. பின் தேர்தல் முடிந்த கையோடு ஒற்றுமை காற்றில் பறக்கவிடப் படுகிறது.

புலிகள் இருந்த காலத்தில் ஒன்றாக்கப் பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போது பல்வேறு துண்டுகளாக உடைந்து போயுள்ளது. எஞ்சியுள்ள ஏனைய கட்சியினரை கிஞ்சித்தும் மதிக்காமல் தமிழரசுக் கட்சி தனிப் பாதையில் பயணித்து வருகிறது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் ஏனைய தமிழ்த் தேசியம் சார் கட்சிகளுடன் இணைந்து செயற்படுவதில் கடுமை யான தூய்மைவாதம் பார்த்து வருகின்றது.

தமிழ் அரசியல் பரப்பில் கோட்பாட்டு ரீதியில் வேறுபட்ட கட்சிகள் இருப்பது வரவேற் கத்தக்கது. ஆனால் இங்குள்ள கட்சிகள் எல்லாமே தேர்தல் மைய அரசியலை நோக்கித் தான் தங்களது செயற்பாடுகளை செய்கின்றனவே ஒழிய மக்கள் மைய அரசியலை முன்னெடுக்க தயாரில்லை. கட்சிகளது சுயநலமே இங்கு மேலோங்கியுள்ளது.

இதனால் திட்டமிட்டு அரசினால் முன் னெடுக்கப்படும் ஆக்கிரமிப்புக்களுக்கு கூட ஒற்று மையாக தமது எதிர்ப்பை வெளிப்படுத்த இவர் களால் முடியவில்லை. தங்களது கூட்டில் உள்ள ஏனைய கட்சிகளை மதிக்காமல் சுமந்திரனின் அமெரிக்கா நோக்கிய தனித்து ஓட்டம் எங்களது கட்சிகளின் சுயநலப்போக்குகளை வெளிப்படுத்திய உச்சக்கட்டமாகும்.

சர்வதேச அரங்கில் சிறிலங்கா அரசுக் கெதிரான அபிப்பிராயங்கள் அதிகரித்து வரு கின்றன. சீனா இந்தியா நாடுகள் கூட சிறிலங்கா அரசாங்கத்துடனான உறவை ஒரு முறுகலான நிலையிலேயே பேண முற்படுகின்றன. இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கட்சிகள் தமது சுயநலத்தை விடுத்து தமிழ் மக்களின் தாயகம்-தேசியம்-சுயநிர்ணயம் என்ற கோட் பாட்டின் கீழ் ஒற்றுமையை, தாம் பிரதிநிதித் துவப் படுத்தும் தமிழ் மக்களுக்கும் உலகுக்கும் காட்ட வேண்டியது அவசியம்.

- செ. கிரிசாந் -

# வீடுகளை எரிப்பதில் தொடங்கி மனித உடல்களை எரிப்பது வரை

**அரசாங்கம் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையை நிறுத்த வேண்டும்**

2013 ஆம் ஆண்டிலிருந்து சிறீலங்காவின் முஸ்லிம் மக்கள் இனத் துவேசத்தையும், துன்புறுத் தல்களையும் வன்முறைகளையும் தொடர்ச்சியாக அனுபவித்து வருகின்றனர். இதன் உச்சக் கட்டமாக முஸ்லிம் மக்களை வெளிப்படையாக இலக்கு வைக் கும் அரசாங்கத்தின் கொள்கைகள் அமைந்துள்ளன. இவ்வாறாக சர்வதேச மன்னிப்புச் சபை (Amnesty International) புரட்டாதி மாதம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

'வீடுகளை எரிப்பதில் தொடங்கி மனித உடல்களை எரிப்பது வரை: சிறிலங்காவில் முஸ்லிம் களுக்கு எதிரான இனப்பாகுபாடும் வன்முறையும்' என்பது இந்த அறிக்கையின் தலைப்பாகும். 2013 ஆம் ஆண்டிலிருந்து பெருகி வரும் சிங்கள பௌத்த தேசிய வாதம் காரணமாக உருவாகி வரும் முஸ்லிம் எதிர்ப்பு தொடர்பான தகவல்களை இந்த அறிக்கை சொல்கிறது. இந்த இனப் பாகுபாடு முஸ்லிம்கள் மீதான அதிகரித்து வரும் காடையர் குழுக்களின் தாக்குதல் களாகத் தொடங்கி இன்று அரசாங்கத்தின் கொள்கைகளாகப் பரிணாமித்துள்ளது. கோவிட்–19 காரணமாக இறந்த முஸ்லிம்களின் உடல்களை வலுக்கட்டாயமாக தகனம் செய்வது, முஸ்லிம் பெண்களின் முகத்திரையைத் தடை செய்வது, மதரசாக்களைத் தடை செய்வது என அரசாங்கத்தின் கொள்கைகள் பரிணமித்துள்ளன.

"சிறிலங்கா அரசாங்கத்தின் முஸ்லிம் எதிர்ப்புச் சிந்தனை ஒன்றும் புதிதல்ல. ஆனால் கடந்த சில ஆண்டுகளாக நிலைமை படுமோசமாக ஆகியுள்ளது. அதிகாரிகளின் மறைமுக அனுமதி யோடு முஸ்லிம்களுக்கு எதிராக நடக்கும் வன்முறைச் சம்பவங்கள் விசனமளிக்கும் எண்ணிக்கையில் நடக்கின்றன. இவற்றுடன் அரசாங்கத்தின் வெளிப் படையான முஸ்லிம்களுக்கு எதிரான பேச்சுக் களுடன் கொள்கைகளும் சேர்ந்து கொள்கின்றன." என்று தெரிவிக்கிறார் சர்வதேச மன்னிப்புச் சபையின் உப செயலாளர் நாயகம் கைல் வார்ட் (Kyle Ward).



**– தொகுப்பு : லிங்கம் –**

"சிறிலங்கா அரசு இந்தப் போக்கை நிறுத்தி மேலும் தாக்குதல்களில் இருந்து முஸ்லிம் மக்களைப் பாதுகாக்கும் தனது கடமையைச் செய்ய வேண்டும். முஸ்லிம் மக்களைத் தாக்கியவர்கள் மீது சட்ட நட வடிக்கை எடுக்க வேண்டும். முஸ்லிம்களுக்கு எதிராக அவர்களை இனப்பாகுபடுத்தும், துன்புறுத்தும் கொள்கைகளை இல்லாமல் செய்ய வேண்டும்" என்றும் அவர் தெரிவிக்கிறார்.

**வளரும் முஸ்லிம் எதிர்ப்புவாதம்**

முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையின் எண்ணிக்கையும் அவற்றின் தீவிரத்தன்மையும் 2013 ஆம் ஆண்டிலிருந்து அதிகரித்த வண்ணம் உள்ளன. இந்தத் தாக்குதல்களில் ஈடுபடுபடுபவர்கள் சட்டத் துக்கு புறம்பான சுதந்திரத்தை அனுபவிக்கின்றனர்.

முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகள் 2013 இல் ஹலால் எதிர்ப்பு இயக்கத்துடன் தொடங்கி யது. ஹலால் அத்தாட்சி என்பது ஒரு உணவு இஸ்லா மிய மதத்தின் கோட்பாட்டுக்கு அமைய தயாரிக்கப் பட்டது என்பதைத் தெரிவிக்கும் அத்தாட்சிப் பத்திரமாகும். சிங்கள பௌத்த தேசியவாதக் குழுக்கள் இந்த அத்தாட்சி வழங்கும் நடைமுறையை நிறுத்து வதில் வெற்றி கண்டனர். இந்த இயக்கம் பல பள்ளி வாசல்கள் மீதும் முஸ்லிம் வர்த்தக நிறுவனங்கள் மீதும் தாக்குதலுக்கு வழிவகுத்தது. தாக்குதல்களுக் குப் பொறுப்பானவர்கள் தண்டனைக்கு

ஆளாகாமல் இருந்தமையானது மேலும் அவை போன்ற தாக்குதல்களுக்கு ஊக்கியாக இருந்தது.

2014 ஆம் ஆண்டு சிங்கள பௌத்த தேசிய வாதக் குழுக்கள் தெற்கு சிறிலங்கா கரையோர நகரான அளுத்கமவில் ஓர் ஊர்வலத்தை நடத்தினர். அதனையடுத்து முஸ்லிம்களுக்கு எதிரான இனக் கலவரம் ஏற்பட்டது. அங்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிகாரிகள் நீதி வழங்கவில்லை. வன்முறையை நடத்தியவர்கள் எந்தவித தண்டனைக்கும் ஆளாகாமல் சுதந்திரத்தை அனுபவித்தனர்.

2015 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் சிறுபான்மை மக்களுக்கு நீதியையும் பொறுப்புக் கூறலையும் வழங்குவதாக உறுதியளித்த போதும் அவர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்ந்தன. தேர்தலை அடுத்து, 2017 ஆம் ஆண்டில் முஸ்லிம்களுக்கு எதிரான கலவரம் தெற்கு கரையோர நகரான ஜின் தோட்டவில் வெடித்தது. இது போன்ற வன்முறைகள் 2018 இல் மத்திய மாகாணத்தைச் சேர்ந்த திகனவிலும், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அம்பாறையிலும் நிகழ்ந்தன. இங்கும் குற்றவாளிகள் தப்பித்த அதேவேளை, நகர பாதுகாவலர்களும் இராணுவத்தினரும் வன்முறைகளை நிறுத்த எந்த நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்று பாதிக்கப்பட்டவர்களும் சாட்சிகளும் தெரிவித்தார்கள்.

## 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னரான வன்முறை

2019 ஆம் ஆண்டு உள்ளூர் இஸ்லாமிய அரசு (Islamic State) குழுவினரால் உயிர்த்த ஞாயிறு அன்று ஒருங்கிணைந்த முறையில் பல இடங்களில் நடத்தப்பட்ட தாக்குதல்களைத் தொடர்ந்து முஸ்லிம் எதிர்ப்புவாதம் மேலும் அதிகரித்தது. அதனைத் தொடர்ந்து 2019 வைகாசி 13 ஆம் திகதி, ரமழான் காலத்தில் வடமேற்கு மாகாணத்தில் பல நகரங்களில் இருந்த முஸ்லிம்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன. நாடு முழுவதிலும் இருந்த பல பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டன. முஸ்லிம்களுக்கு எதிரான வன்மப் பேச்சு சமூக ஊடகங்களில் பரவிக் காணப்பட்டது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தொடர்ந்து அரசாங்கத்தினால் விரைந்து நிறைவேற்றப்பட்ட அவசரகாலச் சட்ட விதிகள் நூற்றுக் கணக்கான முஸ்லிம்கள் எழுந்தமானமாக கைது செய்யப் பயன்படுத்தப்பட்டன.

ஆட்சிக்கு வந்த நாளிலிருந்து இன்றைய அரசாங்கம் தனது அரசியல் மற்றும் பொருளாதாரத் தோல்விகளை மறைக்க முஸ்லிம்களை பலிக்கடாவாக்கி வருகிறது. கோவிட்–19 ஆல் இறந்த முஸ்லிம்களை கட்டாயமாகத் தகனம் செய்யும் அரசின் கொள்கை இதனை தெளிவாக்குகிறது. இறந்த முஸ்லிம்களை எரிப்பது இஸ்லாத்தில் தடைசெய்யப்பட்ட ஒன்று என்பதுவும், கோவிட் தொற்று காரணமாக இறந்தவர்களைப் புதைப்பதால் அந்நோய் பரவும் என்பதற்கு எந்தவிதமான விஞ்ஞான அடிப்படையும் இல்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## முஸ்லிம்களை இலக்கு வைக்கும் அரசாங்கத்தின் கொள்கைகள்


ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தில் வாக்கெடுப்புக்கு முன்னர் ஏற்பட்ட சர்வதேச அழுத்தம் காரணமாக கட்டாயத் தகனக் கொள்கையை அரசு மீளப் பெற்றுக் கொண்ட போதும் முஸ்லிம்களுக்கு எதிரான சட்டவாக்கங்களில் அரசு தொடர்ந்தும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. முஸ்லிம் பெண்கள் முகத்திரை அணிவதைத் தடுக்கவும், மதரசாக்களை தடை செய்யவும் சட்டங்களை இயற்ற முற்படுகிறது. இச்சட்டங்கள் நிறைவேற்றப்பட்டால் சிறிலங்கா அரசியல் யாப்பாலும் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தாலும் பாதுகாக்கப்பட்ட மத ரீதியான சுதந்திரம் மீறப்படும்.

அதிகாரிகள் தற்பொழுது இருக்கும் சட்டங்களையும் முஸ்லிம்களுக்கு எதிராகப் பயன்படுத்துகின்றனர். உதாரணமாக, ஒரு நபரை எந்தவிதமான குற்றச்சாட்டுமின்றி 90 நாட்களுக்கு சிறையில் அடைக்கப் பயன்படும் பயங்கரவாத தடைச் சட்டத்தைச் சொல்லலாம். மேலும், இனரீதியான மற்றும் மதரீதியான வெறுப்பைத் தூண்டுவோருக்கு எதிரான ICCPR சட்டத்தையும் அவர்கள் தவறாகப் பயன்படுத்துகிறார்கள்.

இந்தச் சட்டங்கள் எவ்வாறு தனிமனிதர்களை இலக்கு வைத்து தவறாகப் பயன்படுத்தப்படுகின்றன என்று 'வீடுகளை எரிப்பதில் தொடங்கி மனித உடல்களை எரிப்பது வரை' என்ற தலைப்பிலான அறிக்கை பல உதாரணங்களை பட்டியலிடு

(10 ஆம் பார்க்கவும்)

# பெருந்தொற்று என்பது எமது வாழ்வியலுக்கு எதிரான போரின் விளைவு






வந்தனா சிவா (சூழல் பாதுகாப்பு போராளி)

நன்றி: https://inthesetimes.com/article/vandana-shiva-bill-gates-war-against-life-extinction-pandemic (புரட்டாதி 2020)

2015ஆம் ஆண்டு பங்குனி மாதம் ரெட் (TED Talk) உரையாடல் எனும் நிகழ்வில் மைக்ரோசொவ்ட் நிறுவனர் பில் கேட்ஸ் கொரோனா வைரசின் படம் ஒன்றைக் காட்டினார். எமது காலத்தின் மாபெரும் அழிவின் படம் இப்படித்தான் இருக்கும் என்று அவர் பார்வையாளர்களிடம் தெரிவித்தார். எமது வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாக இருப்பது ஏவுகணைகள் அல்ல கிருமிகளே என்று அவர் தெரிவித்தார். அந்த உரையாடல் நடந்து ஐந்து வருடங்களின் பின் ஆழிப்பேரலை போல கொரோனா பெருந்தொற்று உலகெங்கும் பெருக்கெடுத்தது. அப்போது "இது ஒரு உலகப்போர்" என்று மீண்டும் தனது போர் அறைகூவலை விடுத்தார். "கொரோனா வைரஸ் மனிதகுலத்தின் எதிரியாக ஆகியுள்ளது" என்று அவர் தெரிவித்தார்.

உண்மையில், பெருந்தொற்று ஒரு போர் அல்ல. மாறாக, அது ஒரு போரின் விளைவு. வாழ்வியலுக்கு எதிரான போரின் விளைவு. எந்திரத்தனமாக சிந்தித்து பணத்தைச் சுரண்டும் இயங்குமுறையானது மனிதர்கள் சூழலிலிருந்து வேறுபட்டவர்கள் என்ற ஒரு மாயையை உருவாக்கியுள்ளது. சூழல் ஓர் உயிரில்லாத, அசைவற்ற, மூலப் பொருட்களை சுரண்டி எடுக்கப் பயன்பட வேண்டிய ஒன்று என்ற பொய்மையை உருவாக்கியுள்ளது. ஆனால் உண்மையில் நாங்கள் இந்த உயிரியற் சூழலின் ஒரு பாகம். நாங்கள் இந்த வைரசுச்சூழலின் ஒரு அங்கம். நாங்களே இந்த உயிரினங்கள். இந்த உயிரியற் பல்வகைத்தன்மை மீது, எங்கள் காடுகள் மீது, எங்கள் பண்ணைகள் மீது, எங்கள் உடற்கூறுகள் மீது தொடுக்கப்படும் போர் எமக்கு எதிராக நாமே தொடுக்கும் போர்.

கொரோனாத் தொற்றால் உருவாகியுள்ள சுகாதார நெருக்கடி மனிதகுலத்தின் அழிவு நெருக்கடியிலிருந்து பிரிக்க முடியாதது. அதாவது, இது உயிரியற் பல்வகைத்தன்மையின் ஆரோக்கியத்துக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி. சூழல்பாதுகாப்பின் ஆரோக்கியத்துக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி. இந்த நெருக்கடிகள் எல்லாம் மனிதர்களின் நலன்களை மட்டும் முன்னிறுத்தி இயந்திரத்தனமாகவும் போரியல் ஊடாகவும் உலகத்தைப் பார்ப்பதிலிருந்து ஊற்றெடுக்கின்றன. மனிதர்கள் மற்றைய உயிரினங்களிலிருந்து வேறுபட்டவர்கள் என்றும் அவற்றிற்கு மேலானவர்கள் என்ற பார்வையிலிருந்து வருகின்றன. மற்றைய உயிரினங்களை அடிமைப்படுத்தி, மாற்றியமைத்து, கட்டுப்படுத்தலாம் என்ற சிந்தனையிலிருந்து வருகின்றன. அளவற்ற வளர்ச்சி எனும்

மாயையை நோக்கிய பொருளாதாரக் கொள்கை களில் இருந்தே இந்த நெருக்கடிகள் எல்லாம் தொடங் குகின்றன. கட்டுக்கடங்காத பேராசை பூலோகத் தின் எல்லைகளை மீறி சுற்றுச்சூழலின் உறுதித் தன்மையை அழிக்கிறது. மற்றைய உயிரினங்களை அழிவுக்கு தள்ளுகிறது.

புதிய நோய்கள் உருவாகின்றன, ஏனெனில் உலகமயப்படுத்தப்பட்ட, இயந்திரமயமாக்கப்பட்ட, மற்றும் வினை திறனற்ற விவசாய முறைகள் வாழ்வி யலில் ஊடுருவுகின்றன. சுற்றுச்சூழலை அழிக் கின்றன. விலங்குகள், தாவரங்கள், மற்றும் உயிரினங் களை அவற்றின் வாழ்வியலுக்கோ ஆரோக்கியத் துக்கோ எந்தவித மரியாதையும் கொடுக்காமல் மாற்றியமைக்கின்றன.

கோவிட் போன்ற நோய் பரவல்களின் ஊடாக நாங்கள் உலகமயமாகத் தொடர்புபடுத்தப் படுகிறோம். ஏனென்றால் நாங்கள் மற்றைய உயி ரினங்களின் வாழ்விடங்களை ஊடுருவியிருக்கி றோம். வர்த்தக நலன்களுக்காக பேராசையால் மிருகங்களையும் தாவரங்களையும் மாற்றி அமைத் துள்ளோம். பல்வகைத்தன்மையை அழித்து ஒருவகைத்தன்மையை உருவாக்கியுள்ளோம்.

காடுகளை அழிக்கும் போதும், இயந்திரமயப் பட்ட நச்சுக் கழிவுகளை உருவாக்கும் எந்தவகை போசாக்கையும் தராத ஒருவகைத்தன்மையான உணவை உற்பத்தி செய்யும் போதும், மரபணு மாற்றப்பட்டு செயற்கை இரசாயனங்களால் தொழிற் சாலைகளில் பதப்படுத்தப்படுபவை எங்கள் உணவு களாக மாற்றப்படும் போதும், பூமியும் அதில் வாழும் உயிரினங்களும் எமக்கு மூலப்பொருட்களை வழங்குபவை என்ற மாயைக்குள் நாம் இருக்கும் போதும் இந்த உலகத் தொடர்புகளில் இருந்து தப்ப முடியாது. உயிரியற் பல்வகைத்தன்மையைப் பாதுகாத்து, மனிதர்கள் உட்பட எல்லா உயிரினங் களும் தாமாகவே ஒரு ஒழுங்குக் கட்டமைப்புக் குள் வாழக்கூடிய ஒரு ஆரோக்கியமான தொடர்ச்சி யால் இணைக்கப்படாமல் நாங்கள் நோய்களினால் உலகரீதியில் இணைக்கப்பட்டிருக்கிறோம்.

**“கட்டுக்கடங்காத பேராசை பூலோகத்தின் எல்லைகளை மீறி சுற்றுச்சூழலின் உறுதித்தன்மையை அழிக்கிறது. மற்றைய உயிரினங்களை அழிவுக்கு தள்ளுகிறது”**

உலகில் வாழும் 3.3 பில்லியன் தொழிலாளர் களில் முறைப்படுத்தப்படாத வேலை செய்யும் தொழிலாளர்களாக 2 பில்லியன் பேர் காணப்படு கிறார்கள். அவர்களில் 1.6 பில்லியன் தொழிலாளர் கள் நடமாட்ட முடக்கம் (lockdown) காரணமாக தமது வாழ்வாதாரத்தை இழந்திருப்பதாக சர்வதேச தொழிலாளர் நிறுவனம் (International Labor Organization) தெரிவிக்கிறது. அதேவேளை, கால் பில்லியன் அளவான மக்கள் பட்டினிக்கொடுமைக்கு ஆளாவார்கள் எனவும், அதனால் நாள் ஒன்றிற்கு 300,000 மக்கள் இறக்கக்கூடும் என்றும் உலக உணவு நிறுவனம் (World Food Programme) கூறுகிறது. இவை கூட மக்களைக் கொல்லும் பெருநோய்கள் தான். மொத்தத்தில், மக்களின் உயிர்களைக் காக்க, மக்களைக் கொல்லும் நடமாட்ட முடக்கல்கள் பயன்படுத்தப்பட முடியாதவை.

ஆரோக்கியம் என்பது வாழ்வு மற்றும் வாழ்க்கைச் சூழல் பற்றியது. பில் கேட்ஸ் போன்றவர் கள் முழு உலகத்தின் மீதும் திணிக்கும் ஆரோக்கிய முறைமையில் “வாழ்வு” என்பது இல்லை. அவர் ஆரோக்கியம் தொடர்பான பிரச்சனைகளைத் தீர்ப்ப தற்கு மேலிருந்து கீழ் நோக்கிய ஓர் ஆய்வுக் கூட்டு ஒன்றை உலகளாவிய ரீதியில் உருவாக்கியுள்ளார். முதலில் அப்பிரச்சினைகளை வரையறுக்க நிதி வழங்குகிறார். பின்னர் அப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளை திணிப்பதற்கும் நிதி வழங்குகிறார். இந்த நடவடிக்கைகளினூடாக அவர் மேலும் பணம் ஈட்டு கிறார். அவரது “நிதி உதவி” இயற்கையிலிருக்கும் ஜனநாயகத்தையும் உயிரினங்களின் பல்வகைத் தன்மையினையும் அழிக்கின்றது. அவரது “நன் கொடை” ஒரு பரோபகார முதலீடு மட்டுமல்ல. அது ஒரு பரோபகார ஏகாதிபத்தியம்.

கொரோனா பெருந்தொற்றும் அதனைத் தொடர்ந்த நடமாட்ட முடக்கல்களும் நாம் எந்தளவுக்கு வெறும் பொருட்கள் போல கட்டுப் படுத்தப்படுகிறோம் என்பதை தெளிவாகக் காட்டி யுள்ளன. எங்களது உடலும் சிந்தனையும் அவர்

களால் குடியேறப்பட்டுள்ளன. ஏகாதிபத்தியங்கள் தான் மற்றைய நாடுகளில் குடியேற்றங்களை செய்யும். பொருளாதார இலாபம் ஈட்டுவதற்காக அந்த நாடு களில் உள்ள பழங்குடி மக்களை மூலப் பொருட்களாக பாவித்து சுரண்டும். இயற்கையாக உயிரினங்களை வாழவைக்கும் அவற்றுக்கிடையேயான இறுக்கமான பிணைப்பை இவ்வாறான சுரண்டும் மனப்பான்மை பார்க்காது. உயிர்களின் பல்லினத்தன்மை, அவற்றின் வாழ்க்கைச் சக்கரம், அவற்றுக்கிடையே நடக்கும் பரிமாறல்கள், தமது வாழ்க்கையை மற்ற உயிரினங் களுக்கு இயைபாக ஒழுங்கமைத்துக் கொள்ளக் கூடிய ஆற்றல் என்பவை அதற்குத் தெரிவதில்லை. அது உருவாக்கும் கழிவுப் பொருட்கள், உயிரினங் கள் மீது அவிழ்த்து விடும் வன்முறைகள் அதற்குத் தெரிவதில்லை. நீடித்த நடமாட்ட முடக்கல்கள் எந்த வித மனிதத்துவமும் இல்லாத ஓர் எதிர்காலத்தை உருவாக்குவதற்கான பரிசோதனைக் கூடங்களாக இருக்கின்றன.

கொரோனாத் தொற்று உச்சக் கட்டத்தில் இருந்த பொழுது, 2020 ஆம் ஆண்டு பங்குனி 26ஆம் திகதி ஒரு வடிவமைப்புக் காப்புரிமையை (patent) உலக அறிவுசார் சொத்துரிமை நிறுவனம் (World Intellectual Property Organization) மைக்ரோ சொவ்ட் (Microsoft) நிறுவனத்துக்கு வழங்கியது. இந்தக் காப்புரிமை (Patent 060606) ஒரு நபருக்கு வழங்கப்படும் ஒரு பணியை செய்வதற்கு அவர் உடல் எடுக்கும் செயற்பாடுகள் கிரிப்டோகறன்சி (Criptocurrency) உருவாக்கும் தொழில்நுட்பத் துக்குப் பயன்படுத்தப்படலாம் என்று சொல்கிறது.

மனித உடலிலிருந்து வெளிப்படும் கதிர்கள், மூளையின் செயற்பாடுகள், உடற்திரவப் பாய்ச்சல், இரத்தப் பாய்ச்சல், உள்ளுறுப்புக்களின் செயற் பாடுகள், கண், முகம் போன்ற தசைகளின் அசைவு கள் என்பவைதான் தனது தொழில்நுட்பத்தில் மைக்ரோசொவ்ட் பயன்படுத்த நினைக்கும் மனித உடற் செயற்பாடுகள். இவை படங்கள், இலக்கங்கள், எழுத்துக்கள் போன்றவற்றால் தரவுகள் ஆக்கப்பட்டு பயன்படுத்தப்படும். அதாவது, இந்த வடிவமைப்புக் காப்புரிமை எங்களது உடல், மனம் என்பவற்றை தனது அறிவுசார் சொத்துரிமை என்று பிரிகடனப் படுத்துகிறது.

குடியேற்றவாதிகள் ஒரு நாட்டின் நிலம் மற்றும் வளங்களுக்கு தாமே உரித்துடையவர்கள் என்று பிரகடனப்படுத்திக் கொள்வர். அங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் பழங்குடி மக்களின் கலாச்சாரம் இறைமை என்பவற்றை நிராகரித்து விடுவர். சில சமயங்களில் அந்த மக்களையே அழித்து விடுவர். காப்புரிமை 060606 மூலம் எமது உடலும் சிந்தனையும் தனது குடியேற்றநாடு என்று மைக்ரோ சொவ்ட் பிரகடனப்படுத்துகிறது. எமது உடல்கள் தரவுகள் எனப்படும் மூலப் பொருட்களை அகழ்ந் தெடுக்கும் சுரங்கங்கள் எனப் பிரகடனப்படுத்து கிறது.

நாம் எடுக்கும் எந்தவொரு முடிவும் செயலும் நாம் ஒரு பகுதியாகவுள்ள இந்த இயற்கையையும் உயிர்ச்சமூகத்தையும் பாதிக்கும் என்கின்ற அறிவு எமக்கு இருக்கின்றது. அந்த அறிவுடன் நேர்மை யாகச் செயற்படக் கூடிய இறைமையுள்ள, உணர் வுள்ள, அறிவுள்ள உயிரினமாக எம்மைப் பார்க்காமல் எம்மை ஒரு தொழில்நுட்பப் பயனாளராக மைக்ரோ சொவ்ட் பார்க்கிறது. இந்த எண்மிய உலகில் ஒரு பயனாளர் எந்தவிதமான தேர்ந்தெடுக்கும் உரிமையும் அற்றவர்.

இது மட்டுமே பில் கேட்சின் தொலை தூரப் பார்வையின் முடிவல்ல. உண்மையில் அவரது நோக்கம் இதைவிட மேலும் கபடமானது. அதாவது அவர் பலவீனமான மனங்களையுடைய எமது பிள்ளைகளின் உடல்களிலும் மனங்களிலும் தனது குடியேற்றத்தை நடத்த நினைக்கிறார். சுதந்திரம், இறைமை, என்பவை எவ்வாறு இருக்கும் என்று அறிவதற்கான சந்தர்ப்பம் அவர்களுக்கு கிடைக்க முன்னரே அவர்களைக் கட்டுப்படுத்த நினைக்கிறார்.

2020 வைகாசி மாதத்தில் அமெரிக்காவில் நியூ யோர்க் மாகாணத்தின் அப்போதைய ஆளுனராக இருந்து அன்ரூ கோமோ (Andrew Cuomo) கல்வியை "மீளக்கட்டமைக்க" பில் கேட்சுடன் ஒரு கூட்டை வெளியிட்டார். அவர் பில் கேட்சை ஒரு தூரநோக்குள்ள வழிகாட்டி என்று அழைத்தார். பெருந்தொற்றானது பில் கேட்சின் திட்டங்களை எமது கல்விச் செயற்பாடுகளில் உள்ளடக்க ஒரு வரலாற்றுச் சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது என்று தெரிவித் தார். "இவ்வாறான தொழில்நுட்பங்கள் எம்மிடம் இருக்கும் போது கட்டடங்கள் மற்றும் வகுப்பறை கள் எதற்கு?" என்று அவர் கேள்வி எழுப்பினார்.

உண்மையைச் சொல்லப் போனால் அமெரிக் காவின் பொதுக் கல்விப் பொறிமுறையை சிதைத்து

எறிய பில்கேட்ஸ் இரண்டு தசாப்தங்களாக முயன்று கொண்டிருக்கிறார். அவரைப் பொறுத்தவரை மாண வர்கள் தரவுகளை அகழ்ந்தெடுக்கும் சுரங்கங்கள். அதனாற்தான் பாடசாலை வருகை விகிதம், பல்கலைக் கழக அனுமதி விகிதம், மற்றும் கணிதம், வாசிப்பு பரீட்சை போன்றவற்றில் மாணவர்கள் எடுக்கும் புள்ளிகள் என்பவற்றை அவர் முன்னிலைப்படுத்து கிறார். ஏனெனில் இவை இலகுவாக எண்மியப் படுத்தப்படக் கூடியவை. ஆராயப்படக் கூடியவை.

மறு கற்பனை செய்யப்படும் இந்தக் கல்வி முறையில் மாணவர்கள் வலையமைப்பு ஊடாக தொலைதூரக் கல்வியைப் பெற்றுக் கொள்ளுவார் கள். அப்போது அவர்கள் அதில் கவனம் செலுத்து கிறார்களா என்று கண்காணிக்க முடியும். இந்தக் கற்பனாவாத உலகில் மாணவர்கள் ஒரு பொழுதும் பாடசாலைக்குத் திரும்ப மாட்டார்கள். அவர்களுக்கு நண்பர்கள் இருக்க மாட்டார்கள். அவர்களுடன் விளையாடச் சந்தர்ப்பம் கிடைக்காது. அது ஒரு சமூகம் இல்லாத உலகம். அன்பு, நட்பு, உறவு என்பவை இல்லாத உலகம்.

பில்கேட்ஸ் போன்ற தொழில்நுட்பவிய லாளர்கள் உருவாக்க முனையும் எதிர்கால ஏகாதி பத்தியத்தைப் பார்க்கும் போது மனித குலம் மேலும் பிளவு பட்டு அதன் பெரும்பான்மை "பாவித்து எறியப்படும்" பொருட்களாக இருப்பதைப் பார்க்கி றேன். அவர்களுக்கு அந்த பேரரசில் இடமில்லை. அந்த பேரரசில் இடம் கிடைப்பவர்கள்கூட எண் மியத்தின் அடிமைகளாகவே இருப்பார்கள்.

அதற்கு மாறாக, நாம் இதனை எதிர்த்துப் போரா டலாம். எமக்கென்று இன்னோர் எதிர்காலத்தை உருவாக்கலாம். எமது ஜனநாயகப் பண்புகளை இன்னும் ஆழமாக்கி எமக்குள்ளே பொதுவானவற்றை மீண்டும் கையகப்படுத்தி இங்கு வாழும் உயிரினங் கள் எல்லாம் ஒரு பூலோகக் குடும்பம் என்று இந்தப் பூமியை மீளுருவாக்கம் செய்யலாம். அங்கு உயி ரினங்களின் பல்லினத்தன்மை, சுதந்திரம், ஒற்றுமை, பரஸ்பர தொடர்புத்தன்மை என்பவை பேணப்படும். இது ஆரோக்கியமான எதிர்காலம். நாம் அதற்காகப் போராட வேண்டும். நாம் அதனைக் கையகப்படுத்த வேண்டும்.

**"உயிரியற் பல்வகைத்தன்மையைப் பாதுகாத்து, மனிதர்கள் உட்பட எல்லா உயிரினங்களும் தாமாகவே ஒரு ஒழுங்குக் கட்டமைப்புக்குள் வாழக்கூடிய ஒரு ஆரோக்கியமான தொடர்ச்சி யால் இணைக்கப்படாமல் நாங்கள் நோய்களினால் உலகரீதியில் இணைக்கப்பட்டிருக்கிறோம்"**

நாம் ஓர் அழிவின் விழிம்பில் நின்று கொண்டிருக்கிறோம். உணர்வுடனும் அறிவுடனும் சுதந்திரமாகவும் வாழும் ஓர் உயிரினமாக இருக்கப் போகிறோமா? அல்லது, எல்லையில்லாப் பேராசை யுடன் எங்கள் உடல்களிலும் மனங்களிலும் குடியேறி அழிவைக் கொண்டு வரும் இயந்திரத்துக்கு இடம் கொடுக்கப் போகிறோமா? அல்லது, அந்த இயந்தி ரத்தை நிறுத்தி இந்த உலகின் உயிர்களைக் காப் பாற்றக் கூடிய மனிதாபிமானம், சுதந்திரம், தன்னாட்சி என்பவற்றைப் பாதுகாக்க போராடப் போகிறோமா?

(6 ஆம் பக்க தொடர்ச்சி)

கிறது. முக்கியமாக 15 மாதங்களுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் வழக்கறிஞரும் சமூக செயற்பாட்டாளருமான ஹெஜாஸ் ஹிஸ்புல்லா, கவிஞரும் ஆசிரியருமான அப்நாப் ஜஸீம் என்பவர் களைச் சொல்லலாம். அப்நாப் ஜஸீமுடைய தமிழ்க் கவிதைகள் வன்முறையைத் தூண்டுவதாக எந்த விதமான ஆதாரமுமற்ற குற்றச்சாட்டின் கீழ் 2020 வைகாசி 15 ஆம் திகதியிலிருந்து தடுத்து வைக்கப் பட்டிருக்கிறார்.

"பயங்கரவாத தடைச் சட்டங்கள், கட்டாயத் தகனங்களில் தொடங்கி முகத்திரைத் தடை, மதர சாக்களின் தடை என்று சிறிலங்கா அரசாங்கம் வெளிப்படையாகவே இனவாதக் கொள்கைகளை முஸ்லிம்களுக்கு எதிராக தொடர்ந்து வருகிறது. தற்பொழுது பரிசீலனையில் உள்ள சட்டப் பிரேரணை களை மீள் பரிசீலிக்குமாறு நாங்கள் அரசிடம் கோருகிறோம். அதேவேளை சர்வதேச சமூகம் சிறிலங்காவில் உள்ள சிறுபான்மை மக்களின் சுதந்திரத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்றும் கோருகிறோம்." இவ்வாறாக கைல் வார்ட் தெரிவித்தார்.

# ஆசிரியர் முன்னேற வேண்டும்



- மதுசூதனன்-

இன்றைய சூழலில் ஆசிரியரின் அறிவு, திறன், மனப்பாங்கு, நடத்தையில் மாற்றம் ஏற்பட வேண்டும் கல்வி என்றால் என்ன என்று ஆசிரியர்களிடம், கல்வித்துறை சார்ந்தவர்களிடம் கேட்டால் பலர் அரிஸ்ரோட்டில் அப்படிச் சொல்லியிருக்கிறார், ஜோன் லூயி இப்படிச் சொல்லியிருக்கிறார் என்று பல அறிஞர்களது மேற்கோள்களை சொல்கிற மரபை நாங்கள் பார்க்கிறோம். ஆனால் நிச்சயமாக, எங்களுடைய சுய அறிவை, எங்களுடைய சுய மரியாதையை, ஒரு விமர்சன நோக்கை விரிவாக்குவதற்கான தளத்தை எந்தளவுக்கு கல்வி திறந்து விடுகிறது என்பதில் தான் அதனுடைய நோக்கமும் செயன்முறையும் இருக்க வேண்டும்.

சமூகம் சார்ந்து சிந்திப்பதற்கும், சமூக மாற்றத்துடன் கூடிய வகையில் மனிதவள மேம்பாட்டை முன்னேற்றுவதற்கும் அதற்கான சுயத்துவத்தை, சுயமரியாதை பகுத்தறிவை வளர்ப்பதும் தான் கல்வி. ஏற்கனவே இருக்கும் மேற்கோள்களை ஒப்புவிப்பது என்பதோ, அல்லது மேற்கத்தைய நாடுகளுக்கு தொழிலாளர்களை உருவாக்கிக் கொடுப்பது என்பதோ, அல்லது தொழில் துறையோடு இணைந்து கல்வி போக வேண்டுமென்று ஒரு மாயையை உருவாக்குவது கல்வியல்ல.

'தொழிற்றுறைக்கு தொழிலாளர்களை உருவாக்குவதற்கு கல்வி இருக்க வேண்டும். கல்விக் கொள்கை இருக்க வேண்டும். கல்வி ஏற்பாடு இருக்க வேண்டும். இதற்காகத் தான் கல்வி.' என்று மடத்தனமான ஒரு வாய்ப்பாட்டு ஒப்புவிப்பை எங்களுடைய சமூகம் செய்து கொண்டிருக்கிறது. முதலில் இந்த நிலையில் இருந்து எங்களுடைய சமூகத்தை விடுவிக்க வேண்டியிருக்கிறது. நாம் நாமாக வாழ வேண்டும். நமது சமூகத்தில் சமூக நீதியையும் சமூக நியாயத் தன்மையையும் சம வாய்ப்பையும் உருவாக்குவதற்கான சுய சிந்தனையை சுய நம்பிக்கையை சுய தேடலை சுய மரியாதையை வளர்ப்பதற்கான கல்வியை நாங்கள் கொடுக்கிறோமா? அதற்கான கல்வித் தொகுதியை, அறிவுத் தொகுதிகளை கொண்டு வந்து முன்வைக்கிறோமா? இது தான் நாம் எழுப்ப வேண்டிய விடயம்.

கொரோனாவுக்கு பின்னரான எங்களுடைய கல்வி நிச்சயமாக முன்னர் இயங்கிய பாடசாலை மரபு, கற்றல் கற்பித்தல் செயற்பாட்டினுடைய தொடர்ச்சியாக நிச்சயமாக இருக்கப் போவதில்லை. முகக் கவசம் இல்லாமல் யாரும் நடமாட முடியாது. தேவையில்லாமல் வீட்டை விட்டு வெளியே போக முடியாது. சமூக இடைவெளிகளை பின்பற்ற வேண்டும்.

கடந்த ஒன்றரை வருடங்களாக பிள்ளைகள் கல்விச் சூழலுக்குள் இல்லாமல் வீடுகளுக்குள் முடக்கப்பட்டு இருந்திருக்கிறார்கள். அதனால் பல வேறுபட்ட வதைகளுக்கும் துன்பங்களுக்கும் நெருக்கீடுகளுக்கும் உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலையிலே பாடசாலையை எடுத்த வீச்சுக்கு ஆரம்பித்து, நிறைவு செய்யப்படாத பாட அலகுகளை முழுமையாகப் பூர்த்தி செய்து, பரீட்சைக்கு தயார்ப்படுத்துகின்ற வேலையை செய்ய முடியாது.

பிள்ளைகள் மகிழ்ச்சியுடன் கற்பதற்கான சூழலை உருவாக்கும் வகையில் வெவ்வேறு வகையான நுட்பங்களைக் கையாண்டு அவர்களை தயார்படுத்துகின்ற வேலையை செய்ய வேண்டி இருக்கிறது. பிள்ளைகளை ஒரு கற்றல் சூழலுக்கு பழக்கப்படுத்துகின்ற, பக்குவப்படுத்துகின்ற, உளத்திறன் விருத்திகளை நடத்த வேண்டி இருக்கிறது. இதற்கு ஏதாவது திட்டம் எங்களிடம் இருக்கிறதா?

இணைய வழிக்கூடாக கற்றல் கற்பித்தல் செய்திருக்கிறோம் என சிலர் சொல்லலாம்.

எத்தனை வீதமான பிள்ளைகளுக்கு கற்றல் சூழல் தக்க வைக்கப்பட்டிருக்கிறது? எத்தனை வீதமான பிள்ளைகள் தொடர்ந்து இணையவழியில் ஆர்வம் செலுத்துகின்றனர்?

எம் ஆசிரியர்களுக்கு முன்னைய ஆசிரியர் பயிற்சி அனுபவங்கள் இருக்கின்றன. மாறிவரும் இந்த கொரோனாவுக்குப் பின்னரான காலப்பகுதியில் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு இந்த ஆற்றலும் திறனும் போதுமா? அவர்களுக்கு இந்த நிலைமைக்கு ஏற்ற மாதிரியான கல்வியும் பயிற்சியும் விசேட சிறப்புத் தகுதிகளும் தேவையில்லையா? இவைகளெல்லாம் கொடுப்பதற்கான தேவை இன்றைக்கு இருக்கிறது. ஆக நாம் எங்களுடைய சிந்தனைகளை மாற்றி யோசிக்க வேண்டி இருக்கிறது. மாற்றிச் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

வெறுமனே காலனித்துவ காலத்து கல்வியினுடைய அடிமைத்தன சுரண்டல் ஒடுக்குமுறை மனோபாவங்களில் இருந்து கல்வியை விடுவிக்க வேண்டும். அப்போதுதான் காலனித்துவ காலத்துக்கு பிறகு கண்ணுக்குப் புலப்படாத வகையில் தொடரப் போகின்ற சமூக அநீதிகளிடமிருந்தும் அவற்றை நியாயப்படுத்தும் தன்மைகளிலிருந்தும் எங்கள் பிள்ளைகளின் கல்வியை மீட்டெடுக்க முடியும். அதற்கான தேவை எங்களுக்கு இருக்கிறது.

இதற்காக நாம் மாற்றி யோசிக்க வேண்டிய தேவை எங்களுக்கு இருக்கிறது என்பதை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

**“சமூகம் சார்ந்து சிந்திப்பதற்கும், சமூக மாற்றத்துடன் கூடிய வகையில் மனிதவள மேம்பாட்டை முன்னேற்றுவதற்கும் அதற்கான சுயத்துவத்தை, சுயமரியாதை பகுத்தறிவை வளர்ப்பதும் தான் கல்வி”**

கல்வி என்றால் என்ன, கல்வி நிர்வாகம் என்றால் என்ன, கல்வி முகாமைத்துவம் என்றால் என்ன, கல்வித்திட்டம் என்றால் என்ன, கற்றல் கற்பித்தல் செயற்பாடு என்றால் என்ன, கல்வியியலாளர் என்றால் என்ன என்பது போன்ற எண்ணக்கருக்களின் பொருள்கோடலை மீளுருவாக்கம் செய்ய வேண்டிய ஒரு காலத்திற்கு நாம் வந்திருக்கிறோம். மீளுருவாக்கம் செய்தால் தான் தற்போது இருக்கும் தேக்கநிலையில் இருந்து நாம் விடுபடலாம். புதிய அணுகுமுறைகளும், மாற்று சிந்தனைகளும், அதற்கான செயற்பாடுகளையும் கொண்ட புதிய கற்றல் பண்பாட்டை நாம் உருவாக்க முடியும். அதைத் தான் இந்த சமூகம் வேண்டி நிற்கிறது. அதனை செயற்படுத்துவதில் தான் எங்கள் ஒவ்வொருவரினதும் சமூகப் பொறுப்பும் சமூக மேம்பாடு கருதிய உந்துதலுக்கான செயற்பாடுகளும் இருக்கிறதென்பதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

வெறுமனே பரீட்சை மைய நோக்கு நிலையில் இருந்து விடுபட்டு தொடர் மதிப்பீடு, மாற்றுப் பரீட்சை முறைகள் உள்ளடக்கிய புதிய கல்வி மாற்று அணுகுமுறைகளை நோக்கி பயணிப்பதே ஆரோக்கியமானது. ஆசிரியரின் அறிவு, திறன், மனப்பாங்கு, நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியிருக்கிறது.

இலங்கையில் கல்விப் பிரச்சினைகள், கல்வி சார்ந்த முரண்பாடுகளுக்கு நீண்ட வரலாறு உள்ளது. நாங்கள் அந்த முரண்பாடுகளுடன் கணக்குத் தீர்க்காமலேயே வந்துகொண்டிருக்கிறோம். சுதந்திரத்துக்கு முன்னரும் சரி, பின்னரும் சரி கல்வியில் பெரும் மாற்றங்கள் வளர்ச்சிகளை கண்டிருக்கிறோம். ஆனால், பண்பு ரீதியாக எங்களுடைய கல்வித் தரம் எந்தளவுக்கு உயர்ந்திருக்கிறது? ஒரு தொழில் சார்ந்த தகுதிப்பாடுகளுக்கு அப்பால், ஒரு சேவைப் பணியாக எந்தளவுக்கு ஆசிரிய சேவை இருக்கிறது என்பது அடிப்படையான கேள்வி. எங்களுடைய தொழிற்சங்கங்கள் ஆசிரியருடைய உரிமைகள், அவர்களுடைய சம்பள குறைபாடுகள், சம்பள உயர்வு தொடர்பில் கவனம் செலுத்துகின்ற அளவுக்கு ஆசிரியர் பண்பு ரீதியில் மேம்பட்டவராக இருப்பதற்கான உரிமைகள் தகுதிகள் பற்றியெல்லாம் பேசுகின்றனவா? ஆசிரியர்கள் அவற்றை வளர்த்துக் கொள்வதில் கவனம் செலுத்துகிறார்களா என்பது மிகப் பெரிய கேள்வி.

**“நமது சமூகத்தில் சமூக நீதியையும் சமூக நியாயத் தன்மையையும் சம வாய்ப்பையும் உரு வாக்குவதற்கான சுய சிந்தனையை சுய நம்பிக்கையை சுய தேடலை சுய மரியாதையை வளர்ப்பதற்கான கல்வியை நாங்கள் கொடுக்கிறோமா?”**

இந்தக் கொரோனா காலத்தில் ஏற்பட்டிருக்கக் கூடிய நெருக்கடிகளில் இருந்து விடுபடக் கூடிய வகையில் ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் வழங்கப் பட்டிருக்கின்றனவா? சமகால நிலைமைக்கு ஏற்றவாறான வினாக்களை ஆசிரியர் தடைதாண்டல் பரீட்சையில் கொடுத்திருக்கிறார்களா? என்று பார்த் தால் இல்லை என்பதே பதில்.

ஒரு ஆரம்பக்கல்லூரி ஆசிரியர் தன் தொழில்சார்ந்த செயற்பாடுகளில் கொரோனா காலத்தில் ஏற்படக் கூடிய நெருக்கடிகளில் இருந்து விடுபடுவதற்கு என்னவிதமான அணுகுமுறைகளை கைக்கொள்ள எத்தனிக்கப் போகின்றார்? என்னென்ன திட்டம் வைத்திருக்கிறார்? இழந்து போன கல்வியை மீட்டுக் கொள்வதற்கு என்னென்ன நுட்பங்களை கையாளப் போகிறார்? பிள்ளைகளை யோசிக்கப் பண்ணுவதற்கு, தேடப் பண்ணுவதற்கு என்ன செய்யப் போகிறார்? இந்தக் கேள்விகள் முக்கியமானவை.

ஆசிரியர்களுடைய வளம், அவர்களின் சேவை சார் சிறப்பு, அவர்களுடைய அறிவு, ஆற்றுகை, அனுபவம் இவைகள் எல்லாம் மீள் சிந்தனைக்கு உள்ளாக்கப்பட வேண்டிய தேவை இருக்கிறது. ஆசிரியர்கள் வெறும் ஆசிரியர்களாக மட்டும் இன்றைக்கு இருக்க முடியாது. பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கும் முகம் கொடுத்து வரக் கூடிய பிள்ளைகளை வெறும் கற்றல் கற்பித்தல் செயற் பாட்டில் மட்டும் ஆசிரியர்கள் ஈடுபடுத்த முடியாது. பிள்ளைகள் உடல் உள ரீதியில் முகம் கொடுக் கின்ற, குடும்ப ரீதியில் முகம் கொடுக்கின்ற பிரச்சினை களில் இருந்து விடுவிக்கக் கூடிய ஒரு உள மருத்து வராகவும், ஒரு சீர்மைய செயற்படுத்துனராகவும் கூட ஆசிரியர் தொழிற்பட வேண்டி இருக்கிறது. ஆசிரியத் தொழில் வெறுமனவே சம்பளம் வாங்குகின்ற ஏனைய தொழில்கள் போல் இல்லை. மருத்துவம், ஆசிரியம் இரு தொழில்களுமே காசுக்கு விற்கிற தொழில்கள் அல்ல. அவை புனிதமான சேவைகள்.

இணையவழிக் கற்பித்தல் செயற்பாடு வந்ததற்குப் பிறகு, பல தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் தனிப்பட்ட முறையில் நிறுவனம் சாராமல் வகுப்புகளை நடாத்துகின்றனர். நேரடி யாகப் பணம் வாங்குகின்ற புதிய தொழில்முறைகள் வளர்வதற்கு இணையவழிக் கல்வி உதவி செய் கின்றது என்பதையும் மறந்துவிட முடியாது. இந்த நிலை ஆசிரியரின் மனப்பாங்கு தொடர்பில் பல கேள்விகளை எழுப்புகிறது. அது மட்டுமல்ல இந்த தனியார் கல்வி நிறுவனங்கள் பற்றிய மாற்றுப் பார்வையும் இந்தக் காலத்தில் தேவைப்படுகிறது. பாடசாலைகள் கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுவதில் மட்டுப்பாடான நிலை இருக்கிறது. அதே பிள்ளை களுக்கு பள்ளிக்கூடத்திலையும் படிப்பித்து பின் அதே பிள்ளைகளிடம் காசு வாங்கி தனியார் கல்வி நிலையங்களிலும் படிப்பிக்கும் நிலை தேவையா?

மாலை வேளையில் வீடுகள், சனசமூக நிலை யங்கள், கோவில்கள், தேவாலயங்கள், பொது மண்டபங்களை கற்றல் நிலையங்களாக மாற்றுதல் வேண்டும். அங்கு பாடசாலை ஆசிரியர் தன்னுடைய மாணவர்களுக்கு மட்டுமல்ல ஏனைய மாணவர்களுக் கும் கற்பிக்க வேண்டும். அவர்களுக்கான ஊதி யத்தை தன்னார்வ நிறுவனங்கள், கொடையாளர் களிடமிருந்து பெற்றுக் கொடுக்கலாம். உச்சப் பயன்பாட்டு ரீதியில் சமூக நலன்சார்ந்து சமூகப் பொறுப்புடன் செயற்படுவதற்கான சூழலை மாற்றுக் கலாச்சாரத்தை உருவாக்க வேண்டிய தேவை எங்களுக்கு இருக்கிறது. ஆசிரியருடைய ஆளுமை, அறிவு, திறன், நடத்தை, மனப்பாங்கில் எல்லாம் மாற்றங்களை விதைக்க வேண்டிய தேவை இருக் கிறது.

குறிப்பிட்ட காலத்தில் கல்வியினுடைய இலக்குகளை நோக்கி மாணவப் பராயத்தினரை இணைத்து ஒரு எதிர்கால வாழ்வியல் நோக்கில் வாழ்வதற்கான நம்பிக்கை, உந்துதல், அனுபவம், அறிவை வழங்குவதற்கான, விழுமியங்களை கடத்து வதற்கான கல்வித் தலைமைத்துவம் இன்று தேவைப் படுகிறது.

# தமிழ்தேசிய அரசியலோடு விளையாடுபவர்கள் அதற்கேற்ற விலையைக் கொடுத்துத்தான் ஆகவேண்டும்.






தமிழ்தேசிய அரசியலோடு விளையாடுபவர்கள் அதற்கேற்ற விலையைக் கொடுத்துத்தான் ஆக வேண்டும் என தெரிவித்தார் அரசியல் ஆய்வாளர் யோதிலிங்கம். அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடக பேச்சாளர் சுமந்திரன் அவர்கள் கனடாவில் உரையாற்றிய போது அங்கே இருந்த தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் அவரை பேச விடாமல் தடுத்து திருப்பி அனுப்பி இருக்கிறார்கள்.

சாணக்கியனும் சுமந்திரனும் அந்த கூட்டத்தில் உரை ஆற்ற இருந்தனர். சாணக்கியன் பேசி முடிக்கும் வரை மௌனமாக இருந்த தமிழ் தேசிய உணர்வாளர்கள் சுமந்திரன் பேசும்போது பல கேள்விகளை கேட்டு அவரைத் தொடர்ந்து உரையாற்ற விடாமல் தடுத்து திருப்பி அனுப்பியிருந்தார்கள்.

இது பல வாதப்பிரதிவாதங்களை உருவாக்கியிருக்கிறது. சரியா பிழையா என்கின்ற வாதப்பிரதிவாதங்களை உருவாக்கியிருக்கிறது. தமிழ் அரசியல் நிலையிலிருந்து பார்க்கின்ற போது இதைப் பற்றி நாங்கள் ஒரு வலுவான தெளிவை பெற்றுக்கொள்ள முடியும் என்று நான் நினைக்கிறேன்.

இது 2009 க்குப் பின்னரான அரசியலின் விளைவு என்றுதான் கூற வேண்டும். 2009க்கு பின்னர் தமிழ் தேசிய கூட்டமைப்பு குறிப்பாக சம்பந்தனும், சுமந்திரனும், நகர்த்தி இருந்த அரசியல் செயற்பாட்டினால் ஏற்பட்ட கூட்டுக் கோபம் தான்

**“2009க்கு பின்னர் தமிழ் தேசிய கூட்டமைப்பு குறிப்பாக சம்பந்தனும், சுமந்திரனும், நகர்த்தி இருந்த அரசியல் செயற்பாட்டினால் ஏற்பட்ட கூட்டுக் கோபம் தான் இந்த குழப்பத்திற்கு காரணம் என நான் நினைக்கின்றேன்”**

இந்த குழப்பத்திற்கு காரணம் என நான் நினைக்கின்றேன்.

2009க்கு பின்னர் இரண்டு பெரிய அரசியல் போக்குகள் தமிழ் மக்கள் மத்தியிலே எழுச்சி அடைந்தன. ஒன்று இதுவரை காலமும் பின்பற்றிய தமிழ் தேசிய அரசியலை தொடர்ச்சியாக முன் கொண்டு செல்வதா, அல்லது அந்த அரசியலை கைவிட்டுவிட்டு ஒரு சரணாகதி அரசியல் என்கின்ற நிலைக்கு செல்வதா என்பது.

சம்பந்தன்–சுமந்திரன் தலைமை அந்த சரணாகதி அரசியலுக்கு செல்கின்ற முடிவை எடுத்திருந்தனர். அந்த முடிவை எடுத்து அதற்கு ஏற்ற வகையில் மக்களை ஒழுங்கமைக்கின்ற ஒரு செயற்பாட்டைத் தான் இந்த பத்து வருடமாக அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள்.

(19 ஆம் பக்கம் பார்க்கவும்)

# தமிழர் தாயகத்தில் கைத்தொழில்மய நீக்கம் திட்டமிட்டு முன்னெடுக்கப்படுகின்றதா?

- செல்வின் -



எங்களுடைய அபிவிருத்தி செல்நெறி அரசியல் பொருளாதாரமாக மாற்றப்பட வேண்டும். அரசியல் இலக்கோடு இணைந்ததாக அபிவிருத்தி செல்நெறி அமையாவிடில் எங்களுடைய அபிவிருத்தி செல்நெறி எங்களுக்குப் பொருத்தமானதாக இருக்க முடியாது. யுத்தக்காலம் மற்றும் அந்தக் காலத்திற்கு முன்பு வடமாகாணத்தில் பல்வேறு வகையான கைத்தொழில்கள் இருந்தன.

1970 களில் மூடப்பட்ட பொருளாதாரம் இருந்த காலங்களில் புடவைக் கைத்தொழில் மிகப் பிரபல்யமாக இருந்தது. யாழ்ப்பாணத்தின் பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், போன்றவை துணியாலைகளை வைத்து ஆண்களுக்கான காற்சட்டைத் துணி, மேலாடைத்துணி, போன்றவைகளையெல்லாம் உற்பத்தி செய்தார்கள். அதே போன்று பல்வேறு துணி உற்பத்தியாளர்கள் நைலெக்ஸ் சேலைகள் போன்றவற்றை உற்பத்தி செய்து சந்தைக்கு வழங்கினார்கள். அதைவிட இலங்கையில் அன்று முதன்மையாக உள்ளாடை, காலுறை, இதர உற்பத்திகளை செய்யும் இரண்டு பின்னலாடைத் தொழிற்சாலைகள் இருந்தன. தென்னிலங்கையில் இரத்மலானையில் வேலோனா என்பதுவும், யாழ்ப்பாணத்தில் லெய்டன் கார்மன்ஸ் என்பதுவும் மிகவும் பிரபல்யமான பின்னலாடைத் தொழிற்சாலைகளாக இருந்தன.

சவர்க்காரம் தயாரிப்பதில் கூட மில்க் வைற், லாலா சோப் போன்றவை இங்கு முதன்மை பெற்றன. அரஸ்கோ போன்ற நிறுவனங்கள் பழச்சாறுகள் தயாரித்து தகர டப்பாவில் அடைத்து மிகவும் தரமாக சந்தைக்கு வழங்கிக் கொண்டிருந்தன. கோப்பாய் நீர்வேலியிலும் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலும் இரண்டு கண்ணாடித்தொழிற்சாலைகள் இருந்தன. அலுமினியம் சார்ந்த பாத்திரங்களை உருவாக்கும் தொழிற்சாலைகள் அல்லைப்பிட்டி, யாழ். பெருமாள் கோவிலடி, வட்டுக்கோட்டை, மாவிட்டபுரம் என பல இடங்களில் இருந்தன. இவை எல்லாம் தனியார் தொழிற்சாலைகள். சிறப்பாக இயங்கிக் கொண்டிருந்தன. அதற்கு சம காலத்தில் காங்கேசன்துறையில் சீமெந்து தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளம், உப்பை மூலப்பொருளாகக் கொண்ட பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, ஓட்டிசுட்டானில் மட்பாண்ட மற்றும் ஓட்டு தொழிற்சாலை, வாழைச்சேனையில் காகித தொழிற்சாலை போன்றவை மிகச் சிறப்பாக இயங்கிக் கொண்டிருந்தன.

அதைவிட மட்டக்களப்பு கல்குடாவில் அப்போதைய அமைச்சராக இருந்த கே.டபிள்யூ தேவநாயகம் அவர்களின் முயற்சியினால் கல்குடாவில் இலங்கையின் அச்சுத் திணைக்களத்திற்கு சொந்தமான மிகப்பெரிய கிளைப் பதிப்பகம் ஒன்று (அச்சியந்திரசாலை) இருந்தது. இவ்வாறு பல நூறு கைத்தொழில்கள் யுத்தத்திற்கு முன்பு தனியார் துறைக்கு சொந்தமானதாகவும், அரசுக்கு சொந்தமானதாகவும் வெற்றிகரமாக இயங்கி வந்தன.

மன்னாரில் மீனைப் பதப்படுத்தி தகர டப்பாவில் அடைக்கும் தொழிற்சாலை கூட இருந்தது. யாழ். அளவெட்டியில் பிக் என்ற நிறுவனம் குமிழ்முனைப் பேனா, அதற்கான மை, ரப்பர் முத்திரை போன்றவற்றை செய்கின்ற மிகப்பெரிய தொழில் நிறுவனமாக இருந்தது. யுத்தம் காரணமாக இவையெல்லாம் அழிந்து காணாமல் போய் விட்டன. அதேவேளை திறந்த பொருளாதாரம் இலங்கை முழுக்க பரவிக்கொண்டு வந்தது. யுத்தம் முடிந்த பின்பு திறந்த பொருளாதாரத்தின் வேகமான உட்பாய்ச்சலுக்கு ஈடுகொடுக்கக் கூடிய வகையில் தனியார் துறையினராலும், இந்தக் கைத்தொழில்களை உருவாக்க முடியவில்லை. ஏனெனில் கைத்தொழில்

களை செய்து கொண்டிருந்தவர்கள் மீள அவற்றை தொடங்குவதாக இருந்தால் பாரியளவு மூலதனத்தை வேண்டியவர்களாக இருந்தார்கள். அந்த மூலதனத்தை வங்கிக்கடனாக பெறுவதற்கு உடைந்த கட்டிடங்களை தவிர பொறுப்புக் கொடுக்கத்தக்க வகையில் எதுவுமே அவர்கள் கையில் இல்லை.

இன்று யுத்தம் முடிந்து சுமார் 11 ஆண்டுகள் முடிந்து விட்டன. இந்த பதினொரு ஆண்டுகள் முடிந்த பின்பும் எத்தனை கைத்தொழிற்சாலைகள் உரு வாக்கப்பட்டன என்பது மிகப்பெரிய கேள்விக் குறியாக உள்ளது. ஏன் எத்தகைய முயற்சிகளும் எடுக்கப்படவில்லை? திறந்த பொருளாதார முறை மையில் அரசாங்கம் தன் பொறுப்பில் ஒரு தொழிற் சாலைகளையும் வைத்திருப்பதில்லை என்ற கோட் பாடு இருக்கின்றதென்று சொல்லப்படுகிறது. அப்படி யானால், காங்கேசன்துறையில் உள்ள சமெந்து தொழிற்சாலை போன்று வேறு ஏதாவது மாற்று தொழிற்சாலையொன்றை இங்கே தனியார் துறை யிடம் கொடுத்து உருவாக்கி இருக்கலாம். மாவிட்ட புரத்தில் எடுக்கப்படக்கூடிய சுண்ணாம்பு பொருளை சார்ந்தே காங்கேசன்துறையில் சீமெந்து தொழிற் சாலை அமைக்கப்பட்டது. ஆனால், தொடர்ந்தும் அகழ முடியாதளவுக்கு அந்த இடம் சூழல் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. தொடர்ச்சியாக சீமெந்து தொழிற் சாலைக்கு சுண்ணாம்பை அகழ்ந்து அதை மூலப் பொருளாகக் கொண்ட சீமெந்து தொழிற்சாலை மாவிட்டபுரத்திலோ காங்கேசன்துறையிலோ அமைப் பது சாத்தியமேயில்லை.

ஆனாலும் எமது பாரியளவு சீமெந்து தேவை யினை ஈடுசெய்வதற்கு சீமெந்து இறக்குமதி செய்யப்படுகிறது. இந்தியாவிலிருந்து ராம்கோ சீமெந்து இப்பொழுதும் கப்பலில் வந்து காங்கேசன் துறை, மயிலிட்டி துறைமுகங்கள் ஊடாக இங்கே வருகிறது. திருகோணமலையில் மிற்சுபிசி, டோக்கியோ சீமெந்து நிறுவனத்தினர் கப்பலில் பாரிய கொள்கலன்களில் சீமெந்தைக் கொண்டு வந்து தங்களின் களஞ்சியசாலைகளில் வைத்து பின்பு அரைத்து பொதியிட்டு சந்தைப்படுத்துகிறார்கள். தற்போது அம்பாந்தோட்டையில் ஒரு சீமெந்து தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

ஆனால் இங்கேயோ எந்த நடவடிக்கை யும் எடுக்கப் படவில்லை. சுமார் 3000 பேருக்கு

## “அரசியல் இலக்கோடு இணைந்ததாக அபிவிருத்தி செல்நெறி அமையாவிடில் எங்களுடைய அபிவிருத்தி செல்நெறி எங்களுக்குப் பொருத்தமானதாக இருக்க முடியாது”

மேல் வேலை செய்து கொண்டிருந்த தொழிற் சாலை முற்றாக அழிக்கப்பட்டுள்ளது. பின்பு இந்த தொழிற்சாலைக்கு பதிலாக வேறொரு தொழிற் சாலை தொடங்குகின்றோம், அந்த வளவில் மிகப் பெரிய கைத்தொழில் வலயம் செய்யப் போகின் றோம் என்று சொல்லி எல்லாமே பேச்சளவிற்தான் இருந்து கொண்டிருக்கிறது. ஆண்டுகள் கடந்து கொண்டிருக்கின்றனவே தவிர எதுவுமே நடக்க வில்லை.

அதே போன்று பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை 100 வீதம் தரைமட்டமாகி உள்ளது. அதற்குப் பக்கத் தில் அதற்கு தேவையான மூலப்பொருளை கொடுக்கக் கூடிய இலங்கையின் மிகப்பெரிய உப்பளமான ஆனையிறவு உப்பளம் மற்றும் குறிஞ்சாத் தீவு உப்பளம் என்பன உள்ளன. இந்த இரண்டு உப்பளங்களும் முழுமையான செயற்பாட்டுக்கு இதுவரையிலும் கொண்டு வரப்படவில்லை. பல புலம்பெயர் தமிழர்களால் பாரியளவு முதலீட்டைப் போட்டு அதனை செய்வதற்கான முயற்சிகள் பல தடவைகள் அரசாங்கத்தை தொடர்பு கொண்டு எடுக்கப்பட்ட போதும் அது பலவேறு காரணங்களைக் காட்டி தட்டிக் கழிக்கப்பட்டுள்ளது. அதே வேளை தொழில் முயற்சிகளை மிகவும் குறுகிய வட்டத்துக் குள் சுருக்கி தங்களுக்குள் வைத்து செய்கின்ற அணுகுமுறையொன்று கையாளப்பட்டுக் கொண்டி ருக்கிறது.

ஓட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை இயந் திரங்கள் பொருத்தமில்லாதவையாகவும் சேதமடைந் தவைகளாகவும் மாறி விட்டன. அதே வேளையில் ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலைக்கென கிண்டி

யெடுக்கப்பட்ட களிமண் தற்போதைய தொழில்நுட் பத்துடன் கூடிய கூரை ஓட்டுக்கு பொருத்தமில்லாத வையாக இருக்கின்றது. அங்கு களிமண் சார்ந்த மாற்று மட்பாண்டபொருள்கள் செய்யக்கூடிய வாய்ப்புகள் நிரம்ப இருந்தும் அதை ஆரம்பிப் பதற்கான பல முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டும் எல்லாமே அரசாங்க துறையினால் தட்டிக் கழிக்கப் பட்டு விட்டன. தாங்கள் விரும்புகின்ற சில பேரை அழைத்துக் கொண்டு அங்கு வந்து தாங்களும் சமூகமளித்து, படமெடுத்து இப்போது உடனே தொடங்கப்போகிறோம் என பலதடவைகள் சொல்லி வருகிறார்களேயொழிய இதுவரை எதுவுமே நடக்கவில்லை.

ஆனால் மாற்றாக புலம்பெயர் சமூகமும், உள்ளூர் சமூகமும் இங்கே சிறு சிறு கைத் தொழில்களை தொடங்கி இருக்கிறார்கள். குறிப்பாக அவர்கள் தொடங்கி இருக்கின்ற கைத்தொழில்கள் எல்லாமே உள்ளூர் மூலப்பொருள்களை விவசாய மூலப்பொருள்களை விலங்கு வேளாண்மை மூலப் பொருள்களை முதலீடுகளாக கொண்ட சிறு சிறு முயற்சிகள், அதற்கு மேலாக அச்சுவேலியில் இருக் கின்ற கைத்தொழில் பேட்டையில் ஐ.பி.சி நிறுவனம் கடதாசியை மீள் சுழற்சிக்கு உட்படுத்தி அதுசார்ந்த பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை யொன்றை இயக்குகிறது. அதே போன்று இன்னொரு தனியார் துறை ஆணி செய்கிற தொழிற்சாலையை இயக்குகிறது.

ஆனாலும் கைத்தொழில்கள் என்பது யுத்தத் திற்கு பின்பு முழுமையாக கட்டமைக்கப்படவில்லை. கட்டி உருவாக்கப்படவில்லை. இத்தகைய நிலை மையில் போட்டிக் கல்விக்கூடாக தங்களை வளர்த் தெடுத்துக் கொண்டு வருகின்ற எங்களுடைய இளம் சமுதாயம் வேலை தேடும் போது அவர்கள் அத்தனை பேரையும் தாங்கக் கூடிய துறையாக எங்களுடைய விவசாயத் துறையோ கால்நடைத்துறையோ விலங்கு வேளாண்மைத்துறையோ கவர்ச்சிகரமானதாக இல்லை. அவர்களுடைய பிரியத்துக்கும், ஆர்வத் துக்கும் தூண்டில் போட்டு அவர்களை தக்க வைக்கக் கூடிய விதமாக தொழிநுட்பம் சார்ந்ததும் சந்தையில் மதிப்புக் கூடியதுமான கைத்தொழில் முயற்சிகள் இங்கு முன்னெடுக்கப்படவில்லை. இந்த நிலை ஏன் என்கிற கேள்வி எனக்கு முன்னால் இருக்கிறது. ஒரு யுத்தத்தால் அழிந்த சமூகம் இந்த விவசாயத்திலும் கால்நடைவளர்ப்பிலும் மட்டும் தங்கியிராமல் கைத்தொழில்மயப் படுத்தலிலும் மீண்டும் விரைந்து தங்களை முன்னுக்கு கொண்டுவர வேண்டிய தேவை உள்ளது.

**“எங்களுடைய அபிவிருத்தி செல்நெறி அரசியல் பொருளாதாரமாக மாற்றப்பட வேண்டும்”**

உலக வரலாற்றிலேயே விரைந்து தங்களை நிலைப்படுத்திய நாடுகள் என்று சொன்னால் அவைகள் எல்லாம் கைத்தொழில்கள் மூலம் தான் வளர்க்கப்பட்டனவே தவிர விவசாயத்தாலும் ஏனைய துறைகளாலும் வளர்க்கப்படவில்லை. வரலாறு அதனைத் தான் சொல்கிறது. அது ஜேர்மனியின் வரலாறாக இருக்கலாம். ஜப்பானின் வரலாறாக இருக்கலாம். இஸ்ரேலின் வரலாறாக இருக்கலாம். இப்படியான நாடுகள் எல்லாமே கைத்தொழில் மூலம் தான் தங்களை கட்டமைத்துக் கொண்டு துரிதமாக தங்களை நிலைநிறுத்தின. எனவே எங்களுடைய அபிவிருத்தி செல்நெறியில் அந்த துறை சார்ந்து நாங்கள் உரிய கவனமெடுத்தால் நாங்கள் விரைந்து மேலெழுந்து வருவோம். எங்கள் இளைஞர்கள் எல்லோரும் எங்களுடைய உழைப்பாளர் படை. அவர்களுடைய அறிவு சார்ந்த மனித வளத்தை எவ்வாறு நாங்கள் பயன்படுத்தப் போகிறோம் என்கிற கேள்வி இருக்கின்றது. இந்த இடத்தில் தான் நான் வரலாற்றின் பக்கங்களின் ஊடாக ஒரு படிப்பினையை தேட விரும்புகின்றேன். அடோல்ப் ஹிட்லருக்கு கீழான நாஜி ஜேர்மனி ஐரோப்பா முழுக்க படையெடுத்து அங்கே தமது ஆதிக்கத்தை விரிவாக்கிக் கொண்டு சென்றது.

இதனால் இரண்டாம் உலக மகா யுத்த காலத் தில் அமெரிக்காவும் அதனுடைய நேச நாட்டுப் படை களான பிரான்ஸ் பிரித்தானியா போன்ற நாடுகளும் மறுபக்கத்தில் சோவியத் ரஷ்யாவும் இந்த ஜேர்மனியை தோற்கடிப்பதற்காக பல முனைகளில்

இணைந்து போரிட்டனர். அதன் விளைவாக 1943 ஆம் ஆண்டு ஜேர்மனி தோற்கடிக்கப்பட்டது. 1944 ஆம் ஆண்டு அமெரிக்காவினதும் நேச நாட்டுப் படைகளினதும் ரஷ்யாவினதும் கைகளில் விழுந்த போது அவர்கள் எல்லோரிடமும் ஒரு தீர்மானம் இருந்தது. ஜேர்மனி மீண்டும் ஒரு பலம் பொருந்திய தேசமாக மேலெழுந்து போரிடும் ஆற்றலைக் கொண்டிருக்க கூடாது என்பதே அது. அந்நோக்கம் நடைபெற வேண்டுமானால் நாங்கள் ஜேர்மனியை துண்டு போட வேண்டும். ஜேர்மனியை துண்டாக்கி சிதிலமாக்க வேண்டும். எனவே அதன்படி ஜெர்மனியை கூறு போட்டார்கள். ஒரு புறத்தால் சோவியத் ரஷ்யாவும் மறுபுறத்தால் அமெரிக்காவும் இன்னுமொரு புறத்தால் பிரான்சும் இன்னுமொரு பக்கத்தில் பிரித்தானியாவும் அந்த ஜேர்மனியை கூறு போட்டனர். இதன் விளைவாக மேற்கு ஜேர்மனி என்கிற பிரதேசம் அமெரிக்காவின் கையில் வந்த போது அந்த ஜேர்மனியை என்ன செய்வது என்று தீர்மானம் எடுக்க வேண்டிய நிலையில் இருந்தார்கள்.

அப்போதைய காலகட்டத்தில் அமெரிக்க அரசின் முக்கியமான நிதிச் செயலாளராக இருந்தவர் ஹென்றி மோர்கன்தாவ் என்பவர். அவர் அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கையிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். இவர் ஜேர்மன் மீது படையெடுப்புக்கு ஆயத்தமாக இருந்த காலத்திலேயே ஒரு புத்தகம் எழுதினார். அதற்கு பெயர் ஜேர்மனி தான் எங்களுடைய பிரச்சினை (Germany is Our Probelm). அந்தப் புத்தகத்தில் மோர்கன்தாவினுடைய திட்டம் என்னும் ஒரு திட்டத்தை உருவாக்கினார். ஜேர்மன் தோற்கடிக்கப்பட்டு அமெரிக்காவின் கைகளில் விழுந்த பின்பு ஜேர்மனிக்கு எதிரான மன நிலையொன்று அங்கே தெளிவாக வளரவேண்டுமென்ற நோக்கில் அமெரிக்க படைத்தரப்பு மத்தியில் அந்தப் புத்தகத்தைப் பரப்பி விட்டார்.

ஜெர்மனி மீண்டும் வல்லமை பொருந்திய தேசமாக மீள எழக் கூடாது. அப்படி நடக்க வேண்டும் என்று சொன்னால் ஜேர்மனியின் கைத்தொழில் ஆற்றல்கள் அனைத்தும் நிர்மூலம் ஆக்கப்படல் வேண்டும். ஜெர்மனி தன்னை யுத்தத்தில் தனிப் பெரும் சக்தியாக்கி போரிட்டைமைக்கு அடிப்படையாக இருந்தது அதன் கைத்தொழில் ஆற்றலும் அறிவும். அதன்மூலம் தான் சகலவிதமான யுத்த தளபாடங்களையும் அவர்கள் செய்தார்கள். எனவே ஜேர்மனி கைத்தொழில் நாடாக தொடர்ந்தும் இருக்கும் என்று சொன்னால், பலம் பொருந்திய தேசமாக மேலெழுவார்கள். ஆகவே தான் அவர்களின் கைத்தொழில் ஆற்றலை ஒட்டுமொத்தமாக அழிக்க வேண்டும் என்பது மோர்கன்தாவினுடைய திட்டம்.

இந்த திட்டத்தின் சாராம்சம் என்னவென்று சொன்னால் ஜேர்மனியை ஒரு கைத்தொழில் நீக்க நாடாக மாற்ற வேண்டும். ஜேர்மனியை மீண்டும் பாரம்பரிய விவசாய துறைக்குள் தள்ள வேண்டும். அவ்வாறு தள்ளுவதன் மூலம் ஜேர்மனியின் வளர்ச்சியை ஆயிரம் ஆண்டுகளுக்கு பின்தள்ளலாம். என தீர்மானித்து அத்திட்டத்தை நடைமுறைப் படுத்தினார்கள். 1944 ஆம் ஆண்டு தொடங்கிய அந்த திட்டத்தின் படி ஜேர்மனிக்குள் இருந்த அத்தனை கைத்தொழில்களும் அழிக்கப்பட்டன.

தொழிற்சாலைகள் எல்லாம் நிர்மூலமாக்கப்பட்டன. இயந்திரங்கள் எல்லாம் கழற்றி அந்த தேசத்தில் இருந்து அகற்றப்பட்டன. அதே போன்று அந்த கைத்தொழில்களில் வேலை செய்தவர்களும் அது சார்ந்த புத்திஜீவிகளும் அந்த துறைகளில் இருந்து பலவந்தமாக அகற்றப்பட்டு விவசாயம் மற்றும் ஏனைய பாரம்பரிய துறைகளுக்குள் மட்டும் நின்று செயற்படுமாறு நிர்பந்திக்கப்பட்டார்கள். கிட்டத்தட்ட 1944 இல் இருந்து 1947 வரை கைத்தொழில் மய நீக்கம் ஜெர்மன் மீது திணிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டது.

இந்நிலையில் 1947 ஆம் ஆண்டு ஜெனரல் ஜோர்ஜ் மார்ஷல் என்கிற அமெரிக்காவின் இராணுவ அதிகாரியும் அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்த ஹரி ட்ரூமனும் சேர்ந்து ஜேர்மனி தொடர்பான ஒரு அறிக்கையை சமர்ப்பித்தார்கள். ஜேர்மனியை நாங்கள் விவசாய நாடாக அனுமதிப்பதாக இருந்தால் சுமார் 25 மில்லியன் மக்களை ஜேர்மனியில் இருந்து வெளியேற்ற வேண்டி வரும். ஏனெனில் ஜேர்மனியின் விவசாயத்துறைக்கு அந்த நாட்டின் முழு மக்கள் தொகையினரையும் தாங்குகின்ற சக்தி இல்லை. அவர்களின் எதிர்காலத்தையும் கொண்டு செல்லக்கூடிய தாங்குதிறன் இல்லை. எனவே நாங்கள் வேறொரு கொள்கைக்கு மாற –வேண்டும் எனத் தீர்மானித்து ஜோர்ஜ் மார்ஷல் தன்னுடைய மார்ஷல் திட்டத்தை முன்வைத்தார்.

ஜேர்மனி தற்போது எங்களுடைய நாடுகளில் ஒன்றாக மாறி விட்டது. எனவே ஜேர்மனியின் கைத்தொழில் ஆற்றலை மீண்டும் கட்டியெழுப்பி அதனை ஒரு பலமான நாடாக மாற்றுவோம் என்பது மார்ஷல் திட்டத்தின் கூறுகளில் ஒன்று. மார்ஷல் முன்வைத்த அந்த மீண்டும் கைத்தொழிலை உரு வாக்கல் என்கிற கோட்ப்பாடு மோர்கன்தாவினுடைய திட்டத்தை மாற்றீடு செய்தது. அது 1948 இலிருந்து ஜேர்மனியில் நடைமுறைப் படுத்தப்பட்டது. அதன் விளைவு தான் இன்று நாங்கள் பார்க்கின்ற கைத் தொழில் மயமாக்கப்பட்ட ஜேர்மனி.

மோர்கன்தாவினுடைய திட்டத்தின் கீழ் ஜேர்மனி மீண்டு வரக் கூடாது என்பதற்காக கைத் தொழில்மயநீக்கம் செய்யப் பட்டது போன்று வட கிழக்கிலும் ஏதாவது திட்டங்கள் எண்ணக்கருக் கள் திரைமறைவில் இருக்கின்றதா என்கிற கேள்வி என்னிடம் இருக்கிறது. எங்களது இளையோர்களை அறிவும் தொழில் ஆற்றலும் கொண்டவர்களாக வளர்த்தெடுத்து அவர்களை பயன்படுத்தக்கூடிய கைத் தொழில்களை கடந்த 10 வருடங்களாக எங்களால் கட்டமைக்க முடியாதுள்ளது. அவர்களை நாங்கள் அரசாங்கத் துறைகளுக்குள் எந்தவித உற்பத்தி யாளர்களுமில்லாத ஒரு இடத்திற்கு அனுப்பப் பார்க்கிறோம். இல்லையெனில் புலம்பெயர்ந்த தேசங்களுக்கு நாங்கள் அனுப்பப் பார்க்கி றோம். அல்லது மத்தியகிழக்கு போன்ற நாடுகளுக்கு அனுப்பப் பார்க்கிறோம்.

ஒட்டுமொத்தத்தில் எங்கள் விவசாயமும் கால்நடையும் மீன்பிடியும் எங்களது சனத்தொகைக்கு ஏற்றால் போல் எதிர்காலத்தைக் கொண்டு செல்லக் கூடிய தங்கு திறனற்ற வகையில் உள்ளன. அதே வேளை இங்கு ஒரு சனத்தொகை வெளியேற்றம் நடந்து கொண்டிருக்கிறது. மனித வலு வெளியேற்றம் ஒன்று நடக்கிறது. குடித்தொகை பெயர்வு நடக்கிறது.

இந்தப் பின்னணியில் வைத்துக் கொண்டு தான் நாங்கள் சிந்திக்க வேண்டி இருக்கின்றது.

**அடுத்த இதழில் நிறைவுறும்.**

---

**(10 ஆம் பக்க தொடர்ச்சி)**

ஆரம்பத்திலே அவர்கள் தமிழ்த் தேசிய அரசியலில் இருந்து புலி நீக்கம் செய்தார்கள். செல்வராஜா கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து அகற்றப்பட்டமைக்கு அதுதான் காரணம். இந்தியா கூறியது என்பதற்காக அவர்கள் புலி நீக்கம் செய்ய வெளிக்கிட்டார்கள்.

அதற்கு அடுத்த கட்டமாக தமிழ் தேசிய அரசியலில் இருந்து தமிழ்த் தேசியத்தை நீக்கம் செய்ய வெளிக்கிட்டார்கள். சிங்கக் கொடியினை சம்பந்தன் உயர்த்திய நிகழ்வும், அதே வேளை சுதந்திர தின நிகழ்வில் சம்பந்தனும் சுமந்திரனும் கலந்து கொண்ட சம்பவமும் இதைத்தான் காட்டு கின்றன.


அடுத்த கட்டமாக அவர்கள் தமிழ் தேசிய அரசியலை கைவிட்டு அரசாங்கத்துடன் எந்தவித நிபந்தனையும் இன்றி இணக்கத்திற்கு சென்ற விடயமாகும். அவர்கள் ஒரு சரணாகதி அரசியலை செய்ய வெளிக்கிட்டார்கள். அதன் அடிப்படையில் தான் சம்பந்தன் அவர்கள் எதிர்க்கட்சி தலைவர் பொறுப்பை ஏற்றது மட்டுமல்லாது ரணில் அரசாங் கத்திற்கு முட்டுக் கொடுக்கின்ற ஒரு செயற் பாட்டையும் இவர்கள் மேற்கொண்டார்கள்.

இவ்வாறான செயற்பாடுகளின் விளைவாகத் தான் தமிழ் தேசிய கூட்டமைப்பு கடந்த தேர்தலில் குறிப்பிடத்தக்களவான தோல்வி அடைய வேண்டிய நிலமை ஏற்பட்டது. தோல்வி அடைந்த பின்னரும் கூட அவர்கள் தமிழ் தேசிய அரசியலில் இருந்து மக்களை விலக்குகின்ற வேலைகளை தொடர்ந்தும் செய்து கொண்டு வருகிறார்கள்.

ஜெனிவாவில் கால அவகாசம் கொடுத்தது தொடக்கம் புலம்பெயர் சக்திகள் மிகவும் சிரமப்பட்டு மேற்கொண்ட செயற்றிட்டங்கள் எல்லாவற்றையும் அவர்கள் கீழிறக்கியிருக்கிறார்கள்.

இது எல்லாம் சேர்ந்த கூட்டு கோபம்தான் சுமந்திரனை அங்கு உரையாற்ற விடாமல் தடுத்து இருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். தமிழ் தேசிய அரசியலோடு விளையாடுபவர்கள் விலை– யைக் கொடுத்துத்தான் ஆக வேண்டும் என்பதைத் தான் இந்த குழப்பம் உணர வைத்திருக் கிறது என்பது என்னுடைய அபிப்பிராயம்.

# ஈழத்தமிழர் சிறுபான்மையினரா?



**'சிங்கள மக்கள் கூட நாங்கள் ஒரு தேசம் அவர்கள் ஒரு தேசம் என்கிற உணர்வுக்கு சொல்லாமலே வந்திருக்கிறார்கள்"**

20.11.2021 அன்று இடம்பெற்ற ஆபேல் நீதியின் பாதை 42 ஆவது மெய்நிகர் உரையாடலில் "ஈழத்தமிழர் சிறுபான்மையினரா?" எனும் தலைப்பில் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் பொதுச் செயலாளரான தோழர் தியாகு தமிழ்நாட்டிலிருந்து பங்கேற்று பேசினார். அவர் முக்கியமாக தெரிவித்த விடயங்கள் வருமாறு.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முதல் கூறு என்பது அது தேசமாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதாகும். இவ்வளவு உயிர்த்தியாகம் செய்தும் விடுதலை கிடைக்கவில்லை, தனியரசு கிடைக்கவில்லை, ஆனால் ஈழ தேசம் என்கிற உணர்வு ஈழத் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

இன்னும் சொல்லப் போனால் தமிழீழத்தை ஒரு தேசம் என்று வெளிப்படையாக ஒப்புக் கொள்ளவில்லை என்றாலும், சிங்கள மக்கள் கூட நாங்கள் ஒரு தேசம் அவர்கள் ஒரு தேசம் என்கிற உணர்வுக்கு சொல்லாமலே வந்திருக்கிறார்கள். இந்தியாவில் தமிழ் ஒரு தேசிய மொழியாக ஒத்துக் கொள்ளப்படவில்லை. வியப்புக்குரிய செய்தி என்னவென்றால் இலங்கையில் தமிழ் ஒரு தேசிய மொழி. சிங்களமும் தமிழும் தேசிய மொழிகள். 1978 ஆம் ஆண்டு ஜெயவர்த்தனா ஆட்சியில் இயற்றப்பட்ட அரசமைப்பின் படி இரண்டு தேசிய மொழிகளாக சிங்களமும் தமிழும் குறிப்பிடப்படுகின்றன. எது கல்வி மொழி என்கிற கேள்வி வருகிற போதெல்லாம் சிங்களப் பகுதியில் சிங்கள மொழியும் தமிழ்ப் பகுதியில் தமிழ் மொழியும் தான் முதல் மொழியாகவும் இருக்கின்றன. இருந்தாலும் இப்போது இரண்டு பக்கமும் ஆங்கிலம் படையெடுத்திருக்கிறது என்பது வேறு செய்தி. இரண்டு பகுதியிலும் அவரவர் மொழி தான் தேசிய மொழி. இலங்கையின் எந்தப் பகுதிக்குப் போனாலும் சிங்களத்தில் ஒரு பெயர்ப்பலகை எழுதும் போது கீழே தமிழிலும் எழுதுகின்றார்கள். 13 ஆவது திருத்தத்தில் ஆங்கிலத்தை இணைப்பு மொழி என்று சொன்னதால் ஆங்கிலமும் சேர்ந்து விட்டது.

கடந்த காலத்தில் சிங்களத் திணிப்பு பௌத்த திணிப்பு ஆகியவற்றுக்கு எதிராகப் பேசிய சில சிங்களத் தலைவர்களே ஒரு தேசமா இரண்டு தேசமா என்று பேசியிருக்கிறார்கள். ஒரு மொழி இரு தேசம், இரு மொழி ஒரு தேசம் என கொல்வின் டி சில்வா, பண்டாரநாயக்கா ஆகியோர் பேசியிருக்கிறார்கள். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒரு நாடு இரு தேசங்கள் கோட்பாட்டை முன்வைத்து பயணிக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெயரிலும் தேசியம் இருக்கிறது.

திம்புக் கோட்பாட்டில் முதல் விடயமே தமிழ் மக்களை ஒரு தேசமாக அங்கீகரித்தல் என்பதாகும். மறைமுகமாக அது அங்கு ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. இது இவ்வாறெல்லாம் இருக்க தமிழர்களா, அவர்கள் ஒரு சிறுபான்மை குழு என்ற பேச்சை தொடக்கி இருக்கிறார்கள். அது எந்த சூழலில் என்றால், தமிழ் மக்களின் நீதிக்கான போராட்டம் ஒரு வலுவான கட்டத்தை அடைந்திருக்கிறது. இறுதியாக பிரித்தானியாவை சேர்ந்த 200 தமிழர்கள் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தின் வழக்குத் தொடுனரிடம் ஒரு கடிதம் கொடுத்து இருக்கிறார்கள். இது சிங்கள ஆட்சியாளர்களுக்கு நெருக்கடியைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. சட்ட வல்லுனர்கள் எல்லாம் இந்த குற்றச்சாட்டுகளுக்கு தெளிவான ஆதாரம் இருக்கிறது, முதற்கட்டப் புலனாய்வு செய்வதற்கான ஆதாரம் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தின் முதல் கட்டமாகிய அந்த தொடக்க

விசாரணை நடத்துவதற்கான அடிப்படை சாத்திய மாகும் நிலையில் உள்ளது. கதவை தட்டியாகி விட்டது.

இன்னொரு பக்கம் இப்போது இருக்கின்ற ராஜபக்ச குடும்பத்தினுடைய மஹிந்த–கோத்தபாய நடாத்துகின்ற ஆட்சி. தமிழ்மக்கள் எப்போதுமே அந்த ஆட்சிக்கு ஆதரவாக இல்லை. வாக்குகளையும் அளிக்கவில்லை. தமிழ்மக்களின் ஆதரவையும் அவர்களால் பெற முடியவில்லை. ஆனால் அவர்கள் அதைப்பற்றி கவலைப்படாமல் எங்களுக்கு சிங்கள பெரும்பான்மை மக்கள் இருக்கிறார்கள் என்ற இறுமாப்பில் இருக்கிறார்கள். ஆனால், இப்போது எல்லா மக்களுமே ராஜபக்சக்களின் ஆட்சிக்கு எதிராக திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். சிங்கள எதிர்க் கட்சிகள் உட்பட எல்லோருமே எதிராக திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். நாடு பெரும் பொருளாதார நெருக்கடியையும் எதிர்கொண்டுள் ளது. இந்தப் பின்னணியில் தவிக்கும் சிங்கள அரசை பிணையெடுக்கும் முயற்சியை மஹிந்தவின் நண்பர்கள் அல்லது அவர்களுடனான கூட்டணிக் கட்சியில் உள்ளவர்கள் செய்தால் வியப்பில்லை. தமிழ்த்தரப்பிலிருந்தும் சிலர் செய்து கொண்டிருக்கி றார்கள். ஏன் செய்கிறார்கள், அவர்களுக்கு ராஜ பக்சக்கள் மீது என்ன பச்சாபதாபம் என்றால் அதில் தங்களுக்கு தனிப்பட்ட முறையில் தமக்கு வேண்டி யதை சாதித்துக் கொள்ளலாம் என்ற நோக்கமே.

இனவழிப்புக்கு பிறகு 2015 நாடாளுமன்றத் தேர்தலில் 15 உறுப்பினர்கள் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 230 பேர் நாடாளுமன்றில் இருக்கும் நிலையில் 15 பேரை மட்டும் கொண்ட சம்பந்தருக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட்டது. அதனைக் கொண்டு அவர்கள் சாதித்தது என்ன? தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய முடியவில்லை. சிங்கள இராணு வத்தை தமிழர் தாயகப் பகுதிகளில் இருந்து அகற்ற முடியவில்லை. சிங்கள இராணுவத்தினரின் யுத்தக் குற்றங்களுக்கான புலனாய்வு விசாரணை களைக் கூட நடாத்த முடியவில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டுபிடித்துக் கொடுப்பதற் கான எந்த முயற்சியும் நடைபெறவில்லை. ஐ.நாவில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்று வதற்கான எந்த அழுத்தமும் கொடுக்கப்படவில்லை. ஆகவே ஒட்டுமொத்தத்தில் ஒன்றுமே நடக்கவில்லை. இதோ வருகிறது சமஷ்டித் தீர்வு என்று சொல்லி சொல்லியே நாட்கள் கழிந்து விட்டன. சிங்கள அரசுக்கு எந்த சங்கடமும் வராமல் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். அதற்கு என்ன பண்ண வேண்டும்? நாங்கள் இந்தியா விரும்புவது மாதிரியான சில மாற்றங்களை செய்து கொண்டு 13 ஆவது திருத்தம் என்று கேட்போம். இப்படியே சம்பந்தர் தரப்பு சமசரங்களை செய்து கொண்டிருந்தது.

ராஜபக்சக்களுக்கு இருக்கும் அக்கறை என்னவென்றால் தமிழ்த் தரப்பை உடைத்துவிட வேண்டும். புலம்பெயர் அமைப்புக்கள் பலவற்றை தடை செய்துவிட்டு ஐ.நாவில் வைத்து புலம்பெயர் தமிழர்களுடன் பேசுவதற்கு அழைப்பு விட்டார். எதைப்பற்றி பேசுவது? யாரைப்பற்றி பேசுவது? அமெரிக்கா மேற்குலகு இந்திய சக்திகள் கடந்த காலங்களில் இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி களை பயன்படுத்தி தமிழர்களுக்கு நீதி பெற்றுத் தரவில்லை. அல்லது தமிழர்களுக்கு நீதி பெற்று தருவது போல் பாசாங்கு செய்து கொண்டே மறு பக்கத்தில் ஒரு ஆட்சி மாற்றத்தை தங்களுக்கு ஏற்றது போல் செய்து கொண்டார்கள். அது தான் 2015 இல் நடந்தது. 2020 இல் அதனை தொடர முடிய வில்லை. இப்போதும் நிறைய சூழ்ச்சிகள் உருவாகிக் கொண்டே உள்ளன. தமிழர் தரப்பிலிருந்து வளைந்து நெளிந்து போக கூடியவர்களுடனான பேச்சுக்கள் எல்லாமே இப்போதும் நடக்கிறது. கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரனை அமெரிக்க வெளிவிவகாரத் துறை அலுவலகம் பேச்சுக்காக கூப்பிடுவது எல்லாம் அது தான்.

அதனைத் தொடர்ந்து அமெரிக்க வெளி விவகாரத்துறை இட்ட கீச்சகப் பதிவு சர்ச்சையாகி இருக்கிறது. அவர்கள் பதிவிட்டது, **“நிலைமாறுகால நீதி நிகழ்ச்சி நிரல் முழுமையாக இருக்க வேண்டும் என்றால் மீளிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கு இலங்கையில் சிறுபான்மைக் குழுக்களின் கண் ணோட்டங்களையும் கவலைகளையும் செவிமடுத்துக் கேட்பதே இன்றியமையாததாக கருதுகிறோம்.”**
அதற்கு கீழே ஒருவர் பின்வருமாறு கருத்திட்டிருக் கிறார்.

**“இலங்கையில் தமிழர்கள் ஒரு தேசிய இனம். அவர்களைப் போய் சிறுபான்மை என்றெல்லாம் சொல்லாதே. அமெரிக்கா, ஐநா மேலே எல்லாம்**

**நம்பிக்கை கிடையாது. அமெரிக்கா தங்கள் புவிசார் உத்தியை மாற்றிக்கொள்ளவேண்டும்"**

ஈழத்தமிழர்கள் சிறுபான்மை இனமா? எந்த எல்லையை எடுத்துக் கொண்டு பேசுகிறீர்கள் என்பதில் அது தங்கியுள்ளது. இலங்கையில் சிங்கள வர்கள் பெரும்பான்மையாக இருக்கிறார்கள். தெற்காசியாவில் சிங்களவர்கள் சிறுபான்மையினர். எண்ணிக்கையை அளவுகோலாக எடுத்துக் கொள்கி றோம். தெற்காசியாவில் சிறுபான்மை, பெரும் பான்மை என்பது எந்தவிதத்திலும் அவர்களின் அரசி யல் பிரதிநிதித்துவத்தை பாதிக்காது. தமிழர் தாயகத் தில் சிங்களவர்கள் சிறுபான்மையாக இருக்கலாம். இங்கே தமிழ் மக்கள் பெரும்பான்மை. ஆனால் சிறு பான்மையினராகிய சிங்களவர்கள் என தமிழ்மக்கள் சொல்ல முடியாது.

நாம் ஒரு தேசிய இனம். நமக்கென்று ஒரு பொது மொழி இருக்கிறது. நமக்கென்று ஆட்சிப் புலம் இருக்கிறது. நமக்கென்று தனிப்பண்பாடு, பொருளியல் வாழ்வு, வரலாறு இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் ஈழத்தமிழர்களின் அரசும் சிங்கள வர்களின் அரசும் காலம் காலமாக தனித்து இயங் கியன. ஒன்றோடு ஒன்று சேர முடியாதவாறு இயற்கை தடைகளும் இருந்தன. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் கூட அவர்களை ஒன்றாக இணைக்கவில்லை. பிரித் தானியர் தங்கள் ஆட்சி வசதிக்காக ஒன்று சேர்த் தார்கள். அது தான் இன்று இலங்கையாக உள்ளது. சிங்களவர்கள் இந்த நாட்டில் ஆட்சி செய்தார்கள் என்று சொன்னால் தமிழர்களின் ஆட்சியை பறித்துக் கொண்டார்கள் என்று அர்த்தம். இதைத் தான் நாங்கள் சிங்களப் பேரினவாதம், சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறை என்றெல்லாம் அழைக்கி றோம். அத்தமிழர்களுக்கென்று உள்ள தாயகம் இன்று சிங்களவர்களின் கீழ் அடிமைப்பட்டுக் கிடக்கிறது.

எனவே தமிழர்கள் ஒரு தேசிய இனம் என்ப தும், அவர்களின் மொழி ஒரு தேசிய மொழி என்ப தும் நிச்சயமான ஒன்று. ஒரு தேசத்துக்குரிய உரி மைகளை அவர்கள் கோருகிறார்கள். சுயநிர்ணய உரிமை, இறைமையை கோருகிறார்கள் என்பது தான் தமிழ்த் தேசிய இன சிக்கலை தீர்ப்பதற்கான அடிப் படையே. இதனையே இழந்தால் எப்படி ஒத்துக் கொள்ள முடியும். பிரித்தானியாவில் அயர்லாந்து ஐரிஷ் மக்களை சிறுபான்மை என்றால் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். அயர்லாந்தில் ஐரிஷ் தான் பெரும்பான்மை. ஸ்கொட்லாந்தில் ஸ்கொட்டிஷ்.

இப்போது எட்டு நாடுகள் சேர்ந்து எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தியை நிர்வகிக்கும் நோக் கோடு BOGA எனும் Beyond Oil and Gas Alliance எனும் கட்டமைப்பை உருவாக்கி உள்ளார்கள். டென்மார்க், கோஸ்ட்டாரிக்கா சேர்ந்து தான் முதலில் ஆரம்பித்தார்கள். அதில் இப்போது பல நாடுகள் இணைந்தாலும் ஒரு நாட்டின் கவனம் பலரையும் ஈர்த்துள்ளது. கியூபெக் தான் அது. உண்மையிலே கியூபெக் கனடாவின் ஒரு மாநிலமாகும். கனடாவின் ஏனைய பகுதிகளில் பெரும்பாலானவர்கள் ஆங்கிலம் பேசுகிறார்கள். கியூபெக்கில் பெரும்பாலானவர்கள் பிரெஞ்சு பேசுகிறார்கள். ஆனால் இரண்டுக்கும் சமத்துவம் உள்ளது. ஒன்று பெரும்பான்மை மொழி மற்றையது சிறும்பான்மை மொழி என்று இல்லை. அந்த வகையிலேயே கியுபெக்கிற்கு BOGAவில் இணைய சுதந்திரம் உள்ளது. கனடாவின் தேசிய கீதம் பல மொழிகளிலும் பாடப்படுகிறது. இப்போது தமிழிலும் பாட ஆரம்பித்து விட்டார்கள்.

உலகில் சீனமொழி பேசுகிறவர்கள் தான் பெரும்பான்மையாக இருக்கிறார்கள். எனவே சீனா பெரும்பான்மை. ஏனையவர்கள் சிறுபான்மை என்றால் ஒத்துக் கொள்வார்களா? அடிப்படைச் சிக்கல். ஈழத்தமிழர்கள் சிறுபான்மை அல்ல. ஆனால், அமெரிக்க வெளியுறவுத்துறையின் கீச்சகத்தில் சிறு பான்மை என்று விழிக்கப்பட்ட விடயம் தொடர்பில் எந்த மறுப்பும் அங்கு சென்ற அரசியல் தலைவர் களிடம் இருந்து இல்லை. தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு தாயகம், தேசியம், தன்னாட்சி என தங்கள் தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் சொல்லியிருக் கிறார்கள். சிறுபான்மை என்றால் இன்னொருத்தரின் தாயகத்துக்குள் எங்களுக்கு சிறிய இடம் கேட்கி றோமா? ஈழம் ஒரு தேசம் என்பதை மறுப்பது தான் ஈழத்தமிழரை சிறுபான்மை என்று அவர்கள் அழைப்பதன் நோக்கம்.

ஆகவே எந்தவொரு அரசியற்தீர்வும் ஈழத்தமிழரை ஒரு தேசம் என்று அங்கீகரிப்பதி லிருந்தே தொடங்க வேண்டும்.

(23 ஆம் பக்க தொடர்ச்சி)

பல நாடுகளிலுமிருந்து ஊடகவியலாளர்கள் பெரும் எண்ணிக்கையில் திரண்டிருந்த மேற்படி விருது வழங்கும் நிகழ்வில் உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ம. வ. கானமயில்நாதன் மற்றும் உதயன் நிர்வாக இயக்குநர் ஈஸ்வரபாதம் சரவணபவன் ஆகியோர் இணைந்து இந்த விருதினைப் பெற்றுக் கொண்டனர்.

ஊடகத் துறையில் தேசியம் சார்ந்து நெருக்கடியான சூழலில் அர்ப்பணிப்புடன் கடமையாற்றியமைக்காக கடந்த 2018 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 16 ஆம் திகதி யாழ்.ஊடக அமையத்தினால் இவர் கௌரவிக்கப் பட்டிருந்தார்.

ஈழத்து பத்திரிகை வரலாற்றிலேயே தொடர்ச்சியாக ஆசிரியராக இருந்து நெருக்கடியான போர்ச் சூழலிலும் ஊடக அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் தனது இலக்கில் சிறிதும் தடம் மாறாது இறுதிவரை பயணித்துக்கொண்டிருந்த மூத்த ஊடகவியலாளர் ம.வ.கானமயில்நாதன் ஊடகப்பரப்பிலுள்ள இளையோருக்கு ஓர் எடுத்துக்காட்டு என யாழ் ஊடகமன்றத்தின் அஞ்சலிக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊடக பரப்பில் உரிமை கோரப்படாத மரணங்களும் காணாமல் ஆக்கப்படுதல்களும் அச்சுறுத்தல்களும் நிரம்பி வழிந்த யாழ்ப்பாண மண்ணில் அச்சுறுத்தல்களால் அடிபணிய வைக்கலாமென்று பலரும் எதிர் பார்த்திருந்த போதும் தனது ஒற்றை பேனாவின் முனையை நம்பி கொலை வாளின் கீழாக ஊடகப்பணி யாற்றியவர். தமிழ் தேசிய விடுதலைப்போராட்ட பரப்பில் ஊடகப் பங்களிப்பு பற்றிய பதிவுகளில் என்றுமே விலக்கப்படமுடியாத சக்திகளுள் ஒருவராக அவர் இருந்து வந்திருந்தார். 2005இன் பிற்பகுதியில் ஜனநாயகம் பேசுகின்ற துப்பாக்கிதாரர்களது கொலைக் கரங்களில் இருந்து தப்பிக்க அவர் வருடக்கணக்கில் தனது அலுவலகத்தினுள்ளேயே முடங்கிக்கிடந்தமையும் நாள் தோறும் உதயன் நாளிதழை வெளிக்கொணர்ந்தமையுமான வரலாறுகள் இளம் ஊடக சமூகம் கற்றுக்கொள்ளவேண்டிய தொன்று. என யாழ். ஊடக அமையத்தின் அஞ்சலிக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊடகத் துறையில் இவர் ஆற்றிய பெரும் பணிகளைக் கௌரவித்துக் கடந்த 2020 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 8 ஆம் திகதி 'உதயன்' பத்திரிகை நிர்வாகத்தால் இவருக்கு "வாழ்நாள் பிரதம ஆசிரியர்" பதவி வழங்கப் பட்டமை சிறப்பு அம்சமாகும்.

ஒரு பத்திரிகையாளன் எப்படி இருக்க வேண்டும், ஊடக அறம் பேணி எப்படித் தொழிற்பட வேண்டும் என்பதை பலரும் அவரிடம் இருந்து கற்றுக் கொண்டனர். அவற்றுக்கு உதாரணமாக அவரையே கருதிக் கொண்டனர். மிதவாத தமிழ் அரசியல் காலத்தில் பத்திரிகைத்துறைப் பயணத்தை ஆரம்பித்த அவர் ஈழ விடுதலை இயக்கங்களின் ஆதிக்க காலத்திலும், இந்திய, இலங்கை இராணுவங்கள் பிரதேசத்தின் ஆதிக்கத்தில் இருந்த காலத்திலும், விடுதலைப்புலிகளின் ஆட்சியிருந்த காலத்திலும், முள்ளிவாய்க்காலின் பின்னான காலத்திலும் என ஈழத்தமிழரது முக்கிய வரலாற்றுக் காலகட்டங்களில் எல்லாம் அந்த வரலாற்றை செய்திப்படுத்தி, வரலாற்றை ஆவணப்படுத்தலுக்கு வழி வகுத்ததுடன் அவற்றின் சாட்சியாகவும் உள்ளார். என தனது அஞ்சலிக் குறிப்பில் தெரிவித்துள்ளார் எழுத்தாளரான இயல்வாணன்.

## "தனது ஒற்றை பேனாவின் முனையை நம்பி கொலை வாளின் கீழாக ஊடகப்பணியாற்றியவர்"

இவர் தனது வயோதிபக் காலத்திலும் ஊடகத் துறையை அதிகம் நேசித்ததுடன் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக அடக்கு முறைகளுக்கு எதிரான போராட்டங்களிலும், மூத்த ஊடகவியலாளர்களின் இறுதி அஞ்சலிக் கூட்டங்களிலும், நினைவஞ்சலி நிகழ்வுகளிலும் ஆர்வத்துடன் கலந்து கொண்டார்.

அவரிடமிருந்து மூன்று விடயங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும். ஒன்று, புதியவர்களை வளர்த்தெடுப்பதில் காட்டும் அக்கறை. ஒருவர் ஊடகவியலாளராக வர விரும்புகிறார் என்றால் அவருக்கு வழிமுறைகளை சொல்லிக் கொடுப்பார். கடினமாக ஒரு வார்த்தை கூட பாவிக்க மாட்டார். அப்படி வளர்த்தெடுப்பதில் அர்ப்பணிப்புடன் பணியாற்றுவார். இரண்டு, சக ஊழியர்களை கொண்டு நடாத்தும் விதம். அன்பாகவும், அக்கறையாகவும் அதேவேளை கட்டுப்பாட்டுடனும் வழிநடாத்துவார். மூன்று, பத்திரிகையில் எழுதும் பத்தி எழுத்தாளரகள், வேறு கலை, இலக்கிய எழுத்தாளர்களுக்கு அவர் கொடுக்கும் மரியாதை. என அவரை பற்றிய நினைவுகளை பகிர்ந்து கொண்டார் மூத்த எழுத்தாளரான நா. யோகேந்திரநாதன்.

அவரது பூதவுடல் வீட்டிலும் பின் உதயன் பணிமனையிலும் வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டங்கள் இடம் பெற்றன. இறுதிக் கிரியைகள் 23.11.2021 அன்று இடம் பெற்று உடல் யாழ்ப்பாணம் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

# குண்டுமழை பொழியும் தேசத்தில் அயராது ஊடகப்பணியாற்றியவர்

ஈழ ஊடகத் துறையின் அடையாளமாகவும், ஆளுமையாகவும் விளங்கிய மூத்த ஊடகவியலாளரும், உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான ம.வ.கானமயில்நாதன் 22.11.2021 அன்று நல்லூரில் தனது 79 ஆவது வயதில் காலமானார்.

யாழ்.வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், நல்லூர் கைலாசபிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த ம.வ.கானமயில்நாதன் 1942 ஆம் ஆண்டு ஆடி மாதம் 25 ஆம் திகதி பிறந்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து நெடுங்காலம் வெளிவந்து கொண்டிருக்கும் நாளாந்த தமிழ்ப் பத்திரிகையான உதயன் பத்திரிகை ஈஸ்வரபாதம் சரவணபவனால் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்) ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் வாழ்வின் இறுதிக் காலம் வரை சுமார் 37 வருடங்கள் அவர் மேற்படி பத்திரிகையின் பிரதம ஆசிரியராகப் பெரும் பணிகள் செய்துள்ளார். காலைக்கதிர் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் சுமார் இரண்டு வருடங்கள் காலைக்கதிர் பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் அவர் பணியாற்றியுள்ளார்.

இலங்கை இராணுவத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்தம் இடம்பெற்ற நெருக்கடியான காலகட்டத்தில் தாயகத்திலிருந்து ஊடகப் பணியாற்றிய மிகச் சொற்ப அளவிலான மூத்த ஊடகவியலாளர்களுள் கானமயில்நாதனும் ஒருவர். யுத்தத்தின் உச்சம் காரணமாக வலிகாமம் பிராந்தியம் மற்றும் யாழ் நகரை அண்டிய பகுதி மக்கள் இடம்பெயர வேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டது. அப்போது 'உதயன்' பத்திரிகை உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் தென்மராட்சியில் சரசாலை எனும் இடத்தில் தற்காலிக அலுவலகமொன்றை அமைத்து இயங்கிய போதும் பத்திரிகை வெளிவர வேண்டும் என்பதில் கானமயில்நாதன் மிகுந்த அக்கறை காட்டினார்.

கானமயில்நாதனுக்கு தெரிந்த தொழில் ஊடகத்துறை மாத்திரமே. அதனை அவர் நெஞ்சார நேசித்தார். அவர் பல பத்திரிகைகளில் பணியாற்றியவர். பல்லாயிரக்கணக்கான செய்திகள் அவரால் செம்மைப்படுத்தப்பட்டு வெளிவந்தன. வெள்ளீய அச்சு எழுத்துக்காலம் முதல் எண்ணிம யுகம் வரையில் அயராமல் எழுத்தூழியம் புரிந்தவர். என அஞ்சலிக் குறிப்பில் கூறியுள்ளார் எழுத்தாளர் முருகபூபதி.



– செ.ரவிசாந் –

அவசரகால ஒழுங்குமுறை எண்–1 ஐப் பயன்படுத்தி இயற்றப்பட்ட கடுமையான சட்டத்தைப் பயன்படுத்தி 'உதயன்' பத்திரிகை இலங்கை அரசாங்கத்தால் 2000 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 19 ஆம் திகதி மூடப்பட்ட போதும், உள்நாட்டுப் போர் மீண்டும் தொடங்கிய பின் இலங்கை இராணுவம் ஏ–9 நெடுஞ்சாலையை மூடிய பின் யாழ்.மாவட்டத்தில் மருந்து மற்றும் செய்தித்தாள் மற்றும் அச்சிடும் மை உள்ளிட்ட பிற பொருட்களின் கடுமையான பற்றாக்குறை ஏற்பட்ட போதும் 'உதயன்' பத்திரிகை நாளாந்தம் வெளிவருவதில் அவரது பங்கு அளப்பரியது.

2006 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 2 ஆம் திகதி உதயன் பத்திரிகை அலுவலகத்துக்குள் புகுந்த ஆயுததாரிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் உதயன் பணியாளர்கள் இருவர் உயிரிழந்ததுடன் பத்திரிகை அலுலகத்தின் பெறுமதியான சொத்துக்கள் பலவற்றிற்கும் சேதம் ஏற்படுத்தப்பட்டது. இதன்பின்னரும் உதயன் பத்திரிகையின் ஆசிரியர் என்.வித்தியாதரன் 2009 ஆம் ஆண்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். ஊடகவியலாளர்கள் பலரும் தொடர் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டனர். எனினும், ஊடக அடக்குமுறைகளைத் தாண்டி உதயன் பத்திரிகை தொடர்ந்தும் வெளிவருவதற்கு வழிசமைத்தவர்.

பிரான்ஸின் தலைநகர் பரிஸைத் தளமாகக் கொண்டு இயங்கும் எல்லைகளற்ற செய்தியாளர்கள் அமைப்பு ஆண்டு தோறும் சர்வதேச ரீதியாக வழங்கி வரும் ஊடக சுதந்திரத்துக்கான விருதுகளில் மிக முக்கிய விருது உதயனுக்கு கடந்த 2013 கார்த்திகை 27 ஆம் திகதி வழங்கப்பட்டது. பிரான்ஸின் வடகிழக்குப் பிராந்தியமான ஸ்ரார்ஸ்பேர்க்கில் உலகத்தின்

(23 ஆம் பக்கம் பார்க்கவும்)

இந்த இதழானது தமிழ் ஊடகத் திரட்டு நிறுவனத்தினரால் 05.12.2021 அன்று வெளியிடப்பட்டது.